GOKULAM
ஆகஸ்ட் 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



* பயத்தில் பிறந்த சுவர்!

தோட்டம் வைத்த வீரு!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1151


1152


1153


1154


1155


1156



1157


1158


1159


1160


1161


1162


1163


1164


1165


1166


1167


1168


1169


1170


1171


1172


1173


1174


1175

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கல்கி நிறுவன வெளியீடு தரம் நிரந்தரம்

கோகுலம்

ஆகஸ்ட் 2009 மலர் : 27 இதழ் : 7

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

ஆகஸ்ட் என்றவுடன் சுதந்திர தினம் நம் நினைவுக்கு வரும். ஆகஸ்டுக்கு வேறு சில சிறப்புகளும் உண்டு. 'பென்சிலின்' என்ற மருந்தைக் கண்டுபிடித்ததன் மூலம் பல நோய்களுக்கு விடை கொடுத்த 'அலெக்சாண்டர் ஃப்ளெமிங்', கருணையே உருக்கொண்டு திகழ்ந்த அன்னை தெரசா... என்று ஆகஸ்டில் பிறந்து உலகப் புகழ் பெற்றவர்கள் பலர்.

ஆகஸ்ட் சொல்லும் அறிவுரை!



'ஆகஸ்ட்' வரக் காரணம் அகஸ்டஸ் சீஸர்! இவரும், ஜூலியஸ் சீஸரும் மிகப் பெரும் சாம்ராஜ்யமாக ரோமை வடிவமைத்ததால் - ஜூலை மற்றும் ஆகஸ்ட் என இரண்டு மாதங்களில் இடம் பிடித்தனர். இவர்களைப் பற்றி அறியாதவர்களும் இந்த மாதங்களை அறிந்திருக்கிறார்கள். இது நீடித்த வெற்றி! மகாத்மாவின் அகிம்சை தந்த சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது போலவே, ஆகஸ்டுக்கான வரலாற்றையும் அறிந்து கொள்வோம். வெற்றியை வசப்படுத்த விரும்பினால், வரலாறு பற்றிய அறிவும் மிக அவசியம்! 'History repeats itself' என்று சொல்வார்கள். உங்கள் வெற்றிக்கான வழியும், அந்த வரலாற்றினுள் ஒளிந்திருக்கக் கூடும். அதையும் கவனித்துப் பாருங்கள்.

அன்புடன்,
கோகு

விரல் நுனியில் விருந்து!

நமது நிறுவன வெளியீடுகளை இனி இணையதளத்திலும் வாங்கி வாசித்து மகிழ

www.sangapalagai.com

சங்கப்பலகை
தமிழ் பத்திரிகைகளின் வெப் ஸ்டோர்



பறவாத

சுகுணா

எதிரே வந்து கொண்டிருந்த தமிழாசிரியரைப் பார்த்ததும், தானும் நின்றார் அர்ஜுனன். கோயிலுக்குச் சென்று வருவதன் அடையாளமாக திருநீறு பளிச்சிட்டது ஆசிரியரின் நெற்றியில்.

''வணக்கம். கோயில்லேருந்து வர்றீங்களா?''

''ம்...''

''எந்தக் கோயில்?''

நண்பர்கேட்க ஆசிரியர் சொன்னார்.

''பறவாத தும்பி.''

''விளையாடதீங்க. பறந்தாத்தான் அது தும்பி.''

சிரித்தபடியே தொடர்ந்தார் ஆசிரியர்:

''கருகாத வெங்கரி.''

''அது எப்படிங்க? கருகினதாலதான் 'கரி'ன்னே பேரு.''

''பண் புரண்டே இறுகாத தந்தி.''

''தந்தி இறுகினாத்தான் இசை; இல்லைன்னா வெறும் கம்பிதான்.''

''உருகாத மாதங்கம்.''

''தங்கம் உருகலைன்னா, நகை எப்படி பண்றதாம்?''

''நிறவாத சிந்துரம்.''

''சிவக்கறதாலதான் சிந்தூரம்னே பேரு; நீங்க வேற என்னவோ சொல்றீங்க.''

''பூசாக் களபம்.''

''பூசறதுக்கு இல்லன்னா, அப்ப அந்த சந்தனம் எதுக்கு?''

> பறவாத தும்பி; கருகாத வெங்கரி; பண் புரண்டே
> இறுகாத தந்தி; உருகாத மாதங்கம்; இந்து நுதல்
> நிறவாத சிந்துரம்; பூசாக் களபம்; நெடுஞ்கனையில்
> பிறவாத ஆம்பல்; வலஞ்சுழிக்கே வரப் பெற்றனனே? - **காளமேகம்**

''சுனையில் பிறக்காத ஆம்பல்.''

''அப்படி ஒரு பூவே கிடையாது. பொய் சொல்றீங்க.''

நண்பர் பொறுமையிழந்து கூவினார்.

கடகடவென்று சிரித்த தமிழாசிரியர் சொன்னார்:

''நீங்கள் சொன்னது சரிதான். ஆனால் அந்தச் சொற்களுக்கு 'யானை' என்று இன்னொரு





பொருளும் உண்டு. அதாவது நான் சென்று வந்தது யானை முகக் கடவுளான விநாயகர் கோயில்.''

''யப்பா... ஒரு வார்த்தைல சொல்லியிருக்கக் கூடாதா!'' நண்பர் கேட்டதும், ஆசிரியர் சொன்னார்:

''ஒரு பொருளைக் குறிக்க தமிழில் எவ்வளவு சொற்கள் உண்டு என்பது நாமும் அறிய வேண்டாமா... அதற்குத்தான்.'' என்ற தமிழாசிரியர் சொன்னார்:

''காளமேகப் புலவர் திருவலஞ்சுழியில் உள்ள விநாயகப் பெருமான் மீது பாடிய பாடல் இது!''

கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888

தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு : 044 - 4343 8822

tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : 044 - 4343 8811

marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : 044 - 4343 8833

subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு : 044 - 4343 8844

sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ... www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

தோட்டம் வைத்த

தக்காளி, வெண்டை, கத்திரி போன்ற காய்கறிச் செடிகள்; அவரை, பாகல், பூசணிக் கொடிகள், நந்தியா வட்டை, செம்பருத்தி போன்ற மலர்ச் செடிகள், வாழை, தென்னை போன்ற மரங்கள்... இப்படி பெரும்பாலான வீடுகளில் ஒரு தோட்டம் இருந்த காலம் உண்டு. இன்றைக்கு சிறு நகரங்கள் வரை கான்கிரீட் கூடுகளாக முளைத்துவிட்டன ஃப்ளாட்டுகள்.

நகரங்கள் விரிவடைவது ஒரு வகையில் சரிதான் என்றாலும், இன்னொரு விதத்தில் இன்றைய குழந்தைகளுக்கு இயற்கையின் எந்த விஷயமும் தெரியாமல் போய்விடுகின்ற சூழலும் இருக்கிறது.

நெல் வயலோ, தென்னந்தோப்புகளோ, வாழைத் தோட்டங்களோகூட கார்ட்டூனிலும் திரைப்படங்களிலும் குழந்தைகள் பார்க்கின்ற விஷயமாக மாறி போய்விட்டன. குருவி, மைனா, வலியன், நாரை... என்றால் படம் பார்த்துத்தான் அறிகிறார்கள் குழந்தைகள்.

கல்விக்காகவும், பொருளாதாரத் தேவைக்காகவும், நகர்ப்புறங்களை நோக்கிய பயணம் தவிர்க்க இயலாத ஒன்று. அது, புரிந்து கொள்ளக்கூடியது. அதேசமயம், இயற்கையை, அதன் அழகை, அதன் சிறப்பை அறியாமல் போவதும் சரியல்ல.

அடுக்குமாடி வீடுகளில் வசிக்கின்றவர்கள், இந்த மாதிரி தோட்டங்களை நினைத்துப் பார்க்க முடியாதுதான். ஆனால், பால்கனியில் தொட்டிகளில் வளர்க்கத் தகுந்த செடிகள் இருக்கின்றன.

துளசிச் செடிகளை



ராகவன்



வளர்த்தால் புகையால் ஏற்படும் மாசுபாடுகளைக் குறைக்கலாம் என்கிறார்கள் அறிவியலாளர்கள். அப்படி துளசிச் செடி, ஓமவல்லி, திருநீற்றுப் பச்சிலை... போன்ற செடிகளை வளர்க்கலாம். இவற்றுக்கு அதிக வெயிலோ, அதிகமான தண்ணீரோ அவசியமில்லை.

மருத்துவ குணம் கொண்ட இவை, வீட்டினுள் எப்போதும் நறுமணம் கமழச் செய்யும்; குழந்தைகளுக்கு சளி, இருமல் போக்கும் கஷாயம் போடவும் உபயோகப்படும்.

இன்னொரு விஷயம், இயற்கையோடு நமக்குள்ள தொடர்பு இந்த அளவிலாது தொடரத்தான் வேண்டும். இடம் இருப்பவர்கள் இரண்டு தென்னையும், இரண்டு வாழையும் வளர்க்கலாம்; பூச்செடிகள் வளர்க்கலாம். முடியாத நிலையில், இப்படி வீட்டுத் தோட்டமாகவாவது அமைத்துக் கொள்ளலாம்.


அதனால் வீட்டினுள் பசுமையும், காற்றில் குளுமையும் மணமும் இருக்கும். முடிந்தவரை இயற்கையோடு நம்மை இணைத்துக் கொள்வோம். வாழ்வின் அவசியமான அம்சம் இது! ○



அட்டையில்: மாலினி
அட்டை வண்ணப்படம்: ஸ்ரீஹரி

மீனவனான மாணிக்கம் தன் மனைவி கனகுவுடன் ஒரு குடிசையில் வசித்து வந்தான். சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் இல்லாத மிகச் சிறிய குடிசை. அருகிலேயே சாக்கடை ஓடிக் கொண்டிருக்கும்.

ஒரு நாள்... தன் தூண்டிலை எடுத்துக் கொண்டு மீன் பிடிக்க கடலுக்குச் சென்றான் மாணிக்கம். சிறிது நேரத்தில் அவன் தூண்டிலில் ஒரு மீன் சிக்கியது. தங்க நிறத்தில் 'பளபள'வென





மீன் தந்த



எஸ். விஜயலெட்சுமி



மின்னிய அந்த மீன் பேச ஆரம்பித்தது. "மீனவனே! நான் ஒரு கடல் தேவதை. ஒரு முனிவரின் சாபத்தால் பகலில் மீனாகவும், இரவில் தேவதையாகவும் இருக்கிறேன். என்னை விட்டு விடு. உனக்கு வேண்டும் வரம் தருகிறேன்" என்றது.

ஆச்சரியமடைந்த மீனவன், "எனக்கு ஒரு ஓட்டு வீடு வேண்டும். தருவாயா?" என்றான்.

வரம்!

"நிச்சயமாக!" என்றது மீன்.

அதை நீருக்குள் விட்டு விட்டு அவசரமாக வீடு திரும்பினான். அங்கே அவன் பழைய குடிசைக்குப் பதில் அழகான ஓட்டு வீடு இருந்தது. முன்புறம் ஒரு காய்கறித் தோட்டமும், பின்புறம் சிறிய பழத் தோட்டமுமிருந்தன. ஆனந்தத்தில் துள்ளிக் குதித்த அவன், தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான்.

அதைக் கேட்ட கனகுவுக்கு பேராசை ஏற்பட்டது. "போயும் போயும் ஓட்டு வீடா கேட்பது...? எனக்கு மாளிகை வேண்டும் என்று கேள்!" என்று விரட்டினாள்.

கடலுக்குத் திரும்பிச் சென்ற மாணிக்கம் தன் மனைவியின் விருப்பத்தை மீனிடம் கூறினான். "அப்படியே ஆகட்டும்' என்றது மீன்.

வீடு திரும்பிய மாணிக்கம், அங்கே பெரிய மாளிகையைக் கண்டான். நிறைய நகைகளும், பட்டாடையும் அணிந்து செல்வச் சீமாட்டி போல் காட்சியளித்தாள் கனகு. பின்புறக் கொட்டியில் ஏராளமான மாடுகளும் ஆடுகளும் கட்டப்பட்டிருந்தன. பெட்டிகள் நிறைய தங்கக் காசுகளும், வெள்ளிக் காசுகளும் இருந்தன.

"இனி நாம் மகிழ்ச்சியாக வாழலாம்" என்றான் மாணிக்கம். சில நாட்கள் சென்றன. ஒருநாள், "நாம் இருவரும் ராஜா ராணியாக வேண்டும் என மீனிடம் கேள்..." என்றாள் கனகு.

திடுக்கிட்ட மாணிக்கம், "இவ்வளவு செல்வம் போதாதா உனக்கு? இன்னும் ஏன் ஆசைப்படுகிறாய்...?" என்றான். "செல்வம் மட்டும் போதாது. ராணியாகி அனைவரையும் நான் அதிகாரம் செய்ய வேண்டும்" என்றாள் கனகு.

வேறு வழியின்றி மீனை அழைத்து தன் மனைவியின் ஆசையைச் சொன்னான் மாணிக்கம். "அப்படியே ஆகட்டும்" என்றது மீன். மாளிகை அரண்மனையானது. படை வீரர்களும், பணிப் பெண்களுமாக நிறைந்திருந்தனர். பொற்கிரீடம் அணிந்து தங்க அரியணையில் அமர்ந்திருந்தாள் கனகு. இருபுறமும் பணிப் பெண்கள் நின்று சாமரம் வீசிக் கொண்டிருந்தனர்.

அன்றிரவு... மாணிக்கம் நிம்மதியாக உறங்கினான். கனகுவுக்கோ தூக்கமே வரவில்லை. அதிகாலையில் தான் கண்ணயர்ந்தாள். சிறிது நேரத்தில் பொழுது புலர்ந்து, சூரியன் உதித்தது.

திறந்திருந்த ஜன்னல் வழியே பரவிய சூரிய வெளிச்சம் கனகுவின் கண்களைக் கூசச் செய்தது. தூக்கம் கலைந்து எழுந்த அவள், சூரியன் மேல் கடுங் கோபம் கொண்டாள். கணவனை உலுக்கி எழுப்பினாள்.

''என் அனுமதியின்றி சூரியன் உதிக்கக் கூடாது. உடனே மீனிடம் போய் சூரியனை அடக்கியாளும் சக்தி வேண்டுமென வரம் கேள்'' என்று உறுமினாள்.

அஞ்சியவாறே கடற் கரைக்கு ஓடி மீனை அழைத் தான். ''மீனே! மீனே! என் மனைவி இஷ்டப்படும் நேரத்தில்தான் சூரியன் உதிக்க வேண்டுமாம்'' என்றான்.




''மீனே! மீனே! என் மனைவி இஷ்டப்படும் நேரத்தில்தான் சூரியன் உதிக்க வேண்டுமாம்''

''அப்படியே ஆகட்டும்! உன் பழைய நாற்றமெடுத்த குடிசை வீட்டில் சூரிய வெளிச்சம் உள்ளே எட்டிப் பார்க்காது'' என கோபத்துடன் கூறிவிட்டு, நீரில் மூழ்கி மறைந்தது மீன்.

சோகத்துடன் வீடு திரும்பினான் மீனவன். அங்கே அரண்மனை மறைந்து பழைய குடிசை வீடு இருந்தது. தன்னுடைய பேராசையால் அனைத்தையும் இழந்து பழையபடி கந்தல் உடையுடன் நின்று கொண்டிருந்தாள் கனகு.

○



ஓவியப் போட்டி...

தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடப்படும் ஸ்வாமி விவேகானந்தரின் பிறந்த நாளை முன்னிட்டு 20,300 பேர் கலந்து கொண்ட ஓவியப் போட்டியை, கடந்த ஆண்டு தமிழக அளவில் நடத்தியது ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் மாத இதழ். அவற்றில் தேர்வு பெற்ற 502 ஓவியங்கள் சென்னை விவேகானந்தர் இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பெரும் வரவேற்பைப் பெற்ற இந்த ஓவியப் போட்டியை, இந்த ஆண்டு அகில இந்திய அளவில் நடத்தவிருக்கிறார்கள். தமிழ்நாட்டைத் தவிர, பிற மாநிலங்களில் உள்ள 34,000 பள்ளி மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்கப் போகிறார்கள். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் பெங்காலி என்று நான்கு மொழிகளில் இதற்கான போஸ்டர்கள் மற்றும் போட்டி குறித்த விவரப் பட்டியல் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. தன்னார்வத் தொண்டர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்ற இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் கீழ்காணும் இணையதளம் மற்றும் இ-மெயில் மூலம் தொடர்பு கொண்டு விவரம் பெறலாம்.

e.mail:srkmath@vsnl.com **web:www.sriramakrishnamath.org.**


உறுப்பினர்களுக்கான

வினாடி வினா போட்டி முடிவு!

டியர் குட்டீஸ்...

கடந்த ஜூன் இதழில் அறிவித்திருந்த வினாடி - வினா போட்டியில் ஏராளமானோர் உற்சாகமாய் பங்கேற்றிருந்தீர்கள். அதில் குறிப்பிட வேண்டிய இன்னொரு விஷயம், பெரும்பாலானவர்கள் சரியான விடையை எழுதியிருந்தீர்கள் என்பதுதான்!

போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் எங்களது பாராட்டுகள். சரியான விடை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தேர்வு பெற்ற ஐந்து பேருக்கு புத்தகப் பரிசு அனுப்பி வைக்கப்படுகிறது.



1. எம்.எஸ். ஷண்முகப்ரியா, உ.எண். 622, ஜெயராணி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்.
2. ஆர்.ஸ்ரீவித்யா, உ.எண். 466, ஸ்ரீசௌடேஸ்வரி வித்யாலயா, கோவை.
3. டி. நான்சி செவன்னா, உ.எண்.528, அமுதம் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளி, மதுரை
4. ஏ.புஷ்பராஜ், உ.எண். 73, எஸ்.ஆர்.எம். மே.நி.பள்ளி, ஆற்காடு
5. பெ.இன்னிசை வேந்தன், உ.எண்.969, அரசு நடுநிலைப் பள்ளி, லாஸ்பேட்டை

பூமி நிற்காமல் இயங்கிக் கொண்டேயிருக்கிறதே... இதற்கு ஆதார சக்தி எங்கிருந்து கிடைக்கிறது? சுருக்கமாகச் சொன்னால் சூரியனிடமிருந்து தான். பூமியில் உள்ள தாவரங்கள், உயிரினங்கள் எல்லாம் சூரிய ஆற்றலால்தான் வாழ்கின்றன. சூரியனில் இடையறாது எப்படி ஆற்றல் தோன்றிக் கொண்டேயிருக்கிறது? சூரியனின் மையத்தில் ஹைட்ரஜன் மூலக் கூறுகள் தொடர்ந்து மோதிக் கொள்வதால், சூரியனில் ஆற்றல் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கிறது. விஞ்ஞானிகளை ஈர்த்தது இந்த விஷயம். ஏன்?

பெட்ரோல் மற்றும் டீசலின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. 'வளைகுடா நாடுகளின் வளத்துக்குக் காரணமான இந்த எரிபொருள் விரைவில் குறையும். எனவே மாற்று எரிபொருளைக் கண்டறிய வேண்டும்' என்று ஆராய்ச்சி தொடர்கிறது.



நம்முடைய நாட்டிலும் விதைகளில் இருந்து தயாரிக்கப்படும் பயோடீசல் சில இடங்களில் சோதனை முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. என்றாலும் உலகின் எரிபொருள் தேவையை முழுமையாக நிறைவேற்றக்கூடிய மாற்று எரிபொருளுக்கான தேடல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த நிலையில், 'அடுத்த 15 - 20 ஆண்டுகளில் உலகின் பொருளாதார வளர்ச்சிக்கு ஹைட்ரஜன் எரிபொருள் முக்கியப் பங்காற்றும்' என்று ரஷிய அறிவியலாளர் 'விளாதிமீர் நகோரியாகோவ்' உறுதிபடச் சொல்கிறார்.

'ஹைட்ரஜனை எரிபொருளாகப் பயன்படுத்துவதால் பொருளாதார வளர்ச்சி துரிதம் அடையும். உலகின் எரிபொருள் பற்றாக்குறையைப் போக்குவதில் தீவிர கவனம்



பெட்ரோலுக்குப் பதிலாக ஹைட்ரஜன்!



செலுத்த வேண்டும். நிலக்கரி, பெட்ரோலிய எண்ணெய்கள், நில வாயு போன்ற பாரம்பரிய எரிசக்தி ஆதாரங்களால் உலகின் தேவையைப் பூர்த்தி செய்துவிட முடியாது. ஹைட்ரஜன் மற்றும் சூரிய சக்தி உதவியுடன் எரிசக்தித் துறையில் மிகுந்த பயன் பெறலாம்.

ஐஸ்லாந்தில் ஹைட்ரஜனை எரிபொருளாக அறிமுகம் செய்து, வெற்றி பெற்றுள்ளனர். ஹைட்ரஜன் எரிபொருளைக் கொண்ட கார்களை, சமீபத்தில் சோதனை முறையில் ஜெர்மனி அறிமுகப்படுத்தியுள்ளது. ஹைட்ரஜன் எரிபொருள் மிகச் சிறந்தது என்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஜெர்மனியைச் சேர்ந்த 'ஹைட்ரஜன் சேலஞ்சர்' என்ற கப்பல், நீரிலிருந்து ஹைட்ரஜனைப் பிரித்து எரிசக்தியாக மாற்றுகிறது. வணிக மற்றும் தொழிற்சாலைப் பயன்பாட்டுக்கு இந்த எரிசக்தி உதவுகிறது.

பெட்ரோலியம் மற்றும் நில வாயுவை இறக்குமதி செய்யாமல், ஹைட்ரஜன் சக்தியைப் பயன்படுத்தினாலே எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது' என்கிறார் அவர்.

- அ.க.சாய்சுதா, உ.எண். 338
சாவித்ரி வித்யாசாலா இந்து
பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி







வைட்டமின் குழம்பு!

காலை நேர வகுப்பு முடிய சிறிது நேரம் இருந்தது. அதன் பின்னர் பிற்பகல் உணவு நேரம்.

அப்போது கடைசி பெஞ்சில் அமர்ந்திருந்த ஒரு குறும்புக்கார மாணவன், அவனுக்கு அருகில் அமர்ந்திருந்த இன்னொரு மாணவனின் டிஃபன் பாக்ஸை எடுத்து அதன் மூடியைத் திறந்துவிட்டான்.

'குப்'பென்று மீன் குழம்பு வாசனை வகுப்பறையையே தூக்கியது. எங்கள் பள்ளியில் அசைவ உணவுகளைக் கொண்டு வந்து சாப்பிட அனுமதி இல்லை என்றாலும் ஒரு சில மாணவர்கள் அசைவ உணவுகளைக் கொண்டுவந்து சாப்பிடுவதை ஆசிரியர்களும் கண்டுகொள்வதில்லை.


மீன் குழம்பு வாசனையை நுகர்ந்த அனைவரும் பின்னால் திரும்பிப் பார்க்க, ஆசிரியரும் மூக்கைச் சுழித்தபடி சற்று முன்னே வந்து நின்று, "அது என்னடா வாசனை?" என்று கேட்டார்.

மீன் குழம்பு கொண்டு வந்த மாணவன் பயத்துடன் மெல்ல எழுந்து நின்று, "அது வேறொன்றுமில்லை சார், வைட்டமின் - டி" என்றான்.

அது மீன் குழம்பு என்பதைத் தெரிந்துகொண்ட ஆசிரியர், "ஓஹோ! மீனில் வைட்டமின்-டி சத்து அதிகம் இருப்பதால் மீன் குழம்பை அப்படிச் சொல்கிறாயா! கில்லாடிடா நீ!" என்று சொல்லிச் சிரிக்க...

வகுப்பிலிருந்த அனைவருமே சிரித்துவிட்டோம்.

- அ. அனீஸ் ஃபாத்திமா,
உ.எண். 34,
போடிநாயக்கனூர்



தமிழ் ஐயா பாடம் நடத்திக் கொண்டிருந்தார். எல்லோரும் பாடம் நடத்துவதைக் கவனித்துக் கொண்டிருக்க, முத்துவேல் என்ற மாணவன் மட்டும் தலையை

சாக்பீஸ் எடுத்தவன்!



பெயரெச்சம்!

எங்கள் தமிழாசிரியர் மிகவும் ஈடுபாட்டோடு பாடம் நடத்துவார். அதிலும் குறிப்பாக இலக் கணப் பாடத்தில் அதிகக் கவனம் செலுத்துவார்.

ஒருநாள் அவர் பாடம் நடத்தும்போது வகுப்பை விட்டு வெளியே சென்றிருந்த ஒரு மாணவன் தாமதமாகத் திரும்பி வந்தான். தமிழய்யாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ''எங்கேடா போய் சுத்திட்டு வர்றே? பெயரெச்சம், வினையெச்சம்கூடத் தெரியாத நீ, இலக்கண வகுப்பைப் புறக்கணிக்கலாமா?'' என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன், ''எனக்குப் பெயரெச்சம், வினையெச்சம் தெரியும், ஐயா!'' என்றான் அமைதியாக.

''எங்கே பெயரெச்சத்துக்கு ஓர் உதாரணம் சொல்லு'' என்றார் ஆசிரியர். உடனே அந்த மாணவன் 'வந்த மாடு' என்றான். அதைக் கேட்டு ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம். அன்றிலிருந்து அந்த மாணவனுக்கு, 'வந்தமாடு' என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது.




- டி. யாழினி,
உ.எண். 185,
திருவண்ணாமலை

ஒருபுறமாகச் சாய்த்து கன்னத்தில் கைவைத்துக் கொண்டு வாயைத் திறந்தபடி வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஐயா சாக்பீஸை தூக்கி வீச அது சரியாக முத்துவேல் வாயில் போய் விழுந்துவிட்டது. ஒன்றும் புரியாமல் வாயிலிருந்த சாக்பீஸை எடுத்த முத்துவேல், 'யார் போட்டது' எனக் கேட்டான். அப்போது அவன் அருகில் வந்து நின்ற ஐயா, ''டேய், இவன் வாய்ல இருந்து சாக்பீஸ் எடுக்கிறான்டா'' என்று கூற, வகுப்பே கலகலத்தது.

- ஆர். ராஜசேகரன், உ.எண். 1088, அரியலூர்

டாக்டர் கு.கணேசன்



தும்மலால்

பொதுவாக தும்மல் என்பது ஒரு சாதாரண உடலியல் விஷயம். காற்று தவிர வெளிப்பொருள் ஏதாவது தேவையின்றி மூக்கினுள் நுழைந்தால், மூக்கு அதை அனுமதிக்க மறுக்கிறது. அதற்கான அனிச்சைச் செயல்தான் தும்மல்.

தும்மல் என்பது ஒரு நோயா?

சாதாரணமாக ஒருவருக்குத் தும்மல் வந்தால் சில நிமிடங்களில் நின்றுவிடும். அதே நேரத்தில் சிலருக்கு தினமும் நிமிடக்கணக்கில் தும்மல் வந்து தொல்லை கொடுப்பதும் உண்டு. இன்னும் சிலருக்கு தும்மலோடு மூக்கில் நீர் வடிந்து தொல்லை கொடுக்கும். இதற்கு 'ஒவ்வாமைத் தும்மல் நோய்' (Allergic Rhinitis) என்று பெயர்.

அறிகுறிகள்:

இந்த நோய் உள்ளவர்களுக்குத் தும்மல் வந்துவிட்டால் ஓயாது. தொடர்ச்சியாக நூறு முறைகூட தும்முவார்கள். கண்கள் சிவந்து கண்ணீர் வரும். இவை எல்லாமே காலை பத்து மணி வரைதான். வெயில் ஏறியதும் இந்தத் தொல்லைகள் அனைத்தும் மறைந்துவிடும். பிறகு வழக்கமாக தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருப்பார்கள். மறுநாள் காலை மீண்டும் தொடர்ச்சியாகத் தும்மல் வரும்.

யாருக்கு வரும்?

இத்தும்மல் நோய் பெரும்பாலும் இளம் வயதிலேயே துவங்கிவிடும். நடுத்தர வயதினரை விட சிறுவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள் இந்த நோயால் அதிக அளவில் பாதிக்கப்படு

தும்மலா?



கிறார்கள். அதிலும் அப்பா அம்மாவுக்கு இந்த நோய் இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு இது வருவதற்கான வாய்ப்பு பல மடங்கு அதிகரிக்கிறது.

காரணம் என்ன?

வீட்டுத்தூசுதான் தும்மல் நோய்க்கு முக்கியக் காரணம். குறிப்பாக, ஒட்டடை, பருத்தி, பஞ்சு, சணல், சாக்கு, கயிறு, கம்பளி, காகிதம், சிமெண்ட், சுண்ணாம்பு...போன்றவற்றின் தூசு, புகை, மரம், செடிகளின் பூக்களிலிருந்து வரும் மகரந்தங்கள், வீட்டில் வளர்க்கப்படும் நாய், பூனை, ஆடு, மாடு, கோழி, வாத்து, முயல், போன்றவற்றின் உடலிலிருந்து கிளம்பும் செதில்கள், எச்சங்கள் மற்றும் முடிகள் இப்படி பல காரணங்கள் உண்டு.

தூசுப்பூச்சி தெரியுமா?

நம் படுக்கை விரிப்புகள், பாய், தலையணை, மெத்தை ஆகியவற்றில் 'மைட்ஸ்' என்று அழைக்கப்படுகின்ற கண்ணுக்குத் தெரியாத வீட்டுத்தூசுப் பூச்சிகள் கோடிக்கணக்கில் வாழ்கின்றன. இவற்றின் உணவு, நம் உடலிலிருந்து உதிரும் இறந்து போன செல்கள். படுக்கப் போகும்போது தும்மல் வந்தால், அதற்குத் தூசுப்பூச்சிகள்தான் காரணமாக இருக்க முடியும்.

உணவுகள் கவனம்:

நாம் உண்ணும் உணவுகள்கூட தும்மல் நோய்க்குக் காரணமாகலாம். முக்கியமாகக் கடல்மீன், இறைச்சி, கருவாடு, முட்டை, பால், தயிர், கோக், ஈஸ்ட், மென்பானங்கள்... என்று பெரிய பட்டியலே உள்ளது.



இவற்றில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உணவு ஒவ்வாமையை உண்டு பண்ணும். தும்மல், அரிப்பு, தடிப்பு, இளைப்பு போன்ற அறிகுறிகள் தெரியும்போது என்ன உணவு சாப்பிட்டோம் என்பதை எழுதிவைத்துக் கொண்டு, அந்த உணவைத் தவிர்த்து விட்டால் தும்மல் வராது.

சிகிச்சை என்ன?

'ஒவ்வாமைத் தோல் பரிசோதனை' மூலம் தும்மல் எதனால் வருகிறது என்று தெரிந்து கொள்ளலாம். உரிய தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டால் தும்மல் நோய் குணமாகிவிடும். இதற்கு 'இமுனோதெரபி' என்று பெயர்.

இந்த நோய்க்கு உடனடி நிவாரணம் பெற விரும்புவோர் 'ஸ்டீராய்டு மருந்து' கலந்த ஸ்பிரேயை மூக்கில் போட்டுக் கொண்டால் தும்மல் நின்றுவிடும். இத

னுடன் ஒவ்வாமைத் தடுப்பு மாத்திரையையும் பயன்படுத்தலாம். இவை தவிர பிராணாயாமம் போன்ற மூச்சுப்பயிற்சிகளும், சில யோகாசனப் பயிற்சிகளும் தும்மலைத் தடுக்க உதவுகின்றன.

இதை அலட்சியப்படுத்தினால் சைனஸ், ஆஸ்துமா... என்று பல தொல்லைகளைத் துணைக்கு அழைக்கும். ஆகவே ஆரம்பத்திலேயே இதற்குக் 'கடிவாளம்' போட்டுவிட வேண்டும்.

தும்மலைத் தடுக்க 6 வழி:

1. உங்களால் முடிந்த வரை உங்களுக்கு ஒத்துக் கொள்ளாத உணவைத் தவிர்த்து விடுங்கள்.


2. இளங்காலை நேரத்தில் வீட்டை விட்டு வெளியில் வராமல் இருப்பது நல்லது.

3. வீட்டுச் சுவர்களில் தேவையின்றி படங்களைத் தொங்கப் போட்டு ஒட்டடை சேரவிடாதீர்கள். கதவருகில் அல்லது சன்னல் அருகில் தொட்டிச் செடி வளர்ப்பதைத் தவிருங்கள். வீட்டை ஈரத் துணியால் துடைத்து சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். பனிக்காலத்திலும் பூ பூக்கும் காலத்திலும் அறை சன்னல்களைக் காலை பத்து மணி வரை மூடி வையுங்கள்.

4. படுக்கையறை, மெத்தை, பாய் மற்றும் படுக்கை விரிப்புகளைச் சுத்தமாகப் பேணுங்கள். திறந்த அலமாரிகளில் தேவையில்லாமல் நிறையச் சாமான்களை அடுக்கி வைக்காதீர்கள். குளிரூட்டும் கருவிகளில் உள்ள காற்று வடிகட்டிகளை அடிக்கடி சுத்தம் செய்யுங்கள்.

5. ஒட்டடை எடுத்தல், வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் போன்றவற்றை நீங்கள் வீட்டில் இல்லாத போது செய்யச் சொல்லுங்கள்.

6. அசுத்தமான இடங்களில் விளையாடாதீர்கள். ○



வின்னர்ஸ்!

விடையைச் சொல்: பரிசை வெல் - 24ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள்:

1. மெகல்லன் 2. லூசிபெரின், 3. சார்லஸ் டிக்கன்ஸ், 4. தென் அமெரிக்கா, 5. பிகாசோ

பரிசு பெறுவோர்:

1. ஆர். பிரியங்கா, வத்தலக்குண்டு. 2.டி.எம்.சோமேஸ்வரன், கரூர், 3. ச. அபர்ணா, திருச்சி - 21, 4. ஏ. நாராயணன், சேலம் - 4, 5. வி.தன்யா, கல்கத்தா-4, 6. ம. அபிநயா, வேதாரண்யம், 7. மு. மஞ்சுளா, மணல்மேடு, 8. க. தனலட்சுமி, திருப்பாதிரிப்புலியூர், 9. ஆ.சிவரோகித், வேட்டைக்காரன்புதூர், 10. கோ.ரம்யாஸ்ரீ, ஊத்தங்கரை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!



பெயர் : ....

முகவரி : ....

....

....


ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வசுந்தரா

கதை, படம்:
தாமரை




கோட்டையில் பலவீனம் உள்ளதா?
மன்னரிடம் தெரிவிக்க வேண்டும்.
வீரர்கள் சொன்னதைக் கேட்டு சத்ரபதி சிவாஜி வியந்தார். அவளைப் பார்த்து...
நீ வெளியேறிய பகுதியைக் காட்ட முடியுமா?
முடியும்
அவளையும் அழைத்துக்கொண்டு அந்தப் பகுதிக்கு விரைந்தார் சத்ரபதி சிவாஜி.
இதோ... நான் மறைத்து வைத்த பானை...
அவள் சொல்வது உண்மைதான் என உணர்ந்தார்.


நிமிர்ந்து சுவரைப் பார்த்த சிவாஜி திகைத்தார்.
சுவர் வலுவாகத்தானே இருக்கிறது!
இப்பொழுதும் உன்னால் அப்படி செய்ய முடியுமா?
முடியும்...
சுவரில் தொத்திக் கொண்டு ஏற ஆரம்பித்தாள்.
விரைவில் சுவரின் மேற்பகுதியை அடைந்தாள்.
கீழே பார்த்தால்... அதல பாதாளம்...
ஆ... தலை சுற்றுவதுபோல இருக்கிறதே!
கீழே இறங்கி...


அரசே... பயமாய் இருக்கிறது. என்னால் இறங்க முடியாது...
நேற்று இதே வழியாகத்தான் வெளியே சென்றாய் இல்லையா...
ஆம் அரசே... ஆனால் என் குழந்தை மீதான பாசம் மட்டும்தான் அப்போது என்னிடம் இருந்தது...
தாயே... உயிரைவிட குழந்தையே பெரிதென நினைக்கும் உன் போன்றவர்கள் என்றும் வணக்கத்துக்குரியவர்கள்!
சிவாஜியிடம் பரிசு பெற்று வீடு திரும்பினாள் வசந்தரா.



டீ குடிக்கும்

'மூலிகை டீ'யும் ஆப்பிளும் சாப்பிட்டால் உயரமாக வளரலாம்' என ஒருவர் சொல்லியுள்ளார். ஆனால், இது நமக்கு இல்லை! குதிரைக்கு! சொன்னவர், உலகிலேயே உயரமான குதிரை எனப் பெயர் பெற்றுள்ள 'டியூக்' என்ற குதிரையின் முதலாளி. இந்தக் குதிரையின் உயரம் 6 அடி 8 அங்குலம். இந்தக் குதிரையின் அசுர வளர்ச்சியைப் பார்த்த முதலாளி 'சாரா ரோஸ்' மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளார். இதன் அன்றாட உணவு என்ன தெரியுமா? இருபது கேலன் தண்ணீர், ஐந்து கேலன் மூலிகைத் தேநீர் மற்றும் புல், வைக்கோல், தானியங்கள்தான். இந்தக் குதிரையின் வயது ஆறு. நாமும் உயரமாய் வளர 'சாரோ ரோஸ்'கிட்ட டிப்ஸ் கேட்டுக்கலாமா?

இரத்தக் கண்ணீர்!

நம் நாட்டில் உள்ள பாட்னாவைச் சேர்ந்த 'ரக்ஷிதா காட்டூன்' என்ற பெண் இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள். அவள் அழும்போது கண்ணிலிருந்து இரத்தம் வடிகின்றதாம். அதனால், உள்ளூர் மக்கள் அவளை அதிசயமாகப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். மதத் தலைவர்கள் அவள் புனிதத் தன்மை வாய்ந்த பெண் எனக் கூறியதால், ரக்ஷிதாவின் வீட்டுக்கு அர்ச்சனை தட்டுகளும், காணிக்கைகளும் குவியத் தொடங்கிவிட்டன. ரக்ஷிதாவுக்கும் இந்த இரத்தக் கண்ணீர் மர்மம் புரியாத புதிரா



கவே உள்ளது. ஆனால், இரத்தம் வடிகின்றபோது, எந்த வலியும் இல்லை எனவும் கூறியுள்ளார். ' இது மூளையில் உள்ள கட்டியினால் வருகின்றது' 'கண்ணீர்ச் சுரப்பிகளில் ஏற்பட்ட பாதிப்பினால் வருகின்றது' எனப் பலவாறு

குதிரை!

நினைக்கின்றனர். ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை இப்படி இரத்தக் கண்ணீர் வருகின்றதாம். இதை மருத்துவஉலகம் 'ஹீமோலேக்ரியா' (Haemolacria) என்கின்றது. அதாவது கண்ணீருடன் இரத்தம் கலந்து வருகின்ற நிலை. ரக்ஷிதா குணமடைய பிரார்த்திப்போம்!

நீருக்கடியில் பிரமிட்:

ஜப்பானில் உள்ள நியூகூ தீவுகளுக்கு அருகில் உள்ளது யோனாகுனிஜியா தீவு. இங்கே கடலுக்கடியில் பிரமிட் போன்ற தோற்றம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை ஜப்பானைச் சேர்ந்த கடலியல் ஆராய்ச்சியாளர் 'மசாகி கிமுரா' உறுதி செய்துள்ளார். ஆனால், பாஸ்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் 'ராபர்ட் ஸ்காட்ச்' மறுத்துள்ளார். இதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் ஆழ்கடல் சுற்றுலா திட்டத்தை அறிவித்துள்ளது ஜப்பான் அரசு!

வழிகாட்டி

கரப்பான் பூச்சிகள் எந்தச் சூழ்நிலையிலும் வளரும் இயல்பை கொண்டவை. மனிதர்களுக்கு இதய அறைகள் நான்குதான் உள்ளன. ஆனால், கரப்பான்பூச்சிகளுக்கு 13 அறைகள் உள்ளன. மனிதனின் இதய அறை பழுதுபட்டால், உடனே மாரடைப்பு ஏற்பட்டு இறுதியில் உயிரிழப்பில் முடிகின்றது. கரப்பான் பூச்சிக்கு ஒரு அறை பழுதுபட்டாலும், அது சமாளித்துக் கொண்டு உயிர் வாழ முடிகின்றது. இதையே முன்மாதிரியாகக் கொண்டு மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் பத்து பேராசிரியர்கள், புதிய செயற்கை இதயத்தை உருவாக்கியுள்ளனர். பரிசோதனை நிலையில் உள்ள இந்த இதயத்தை மனிதர்களுக்குப் பொருத்திப் பார்க்க இன்னும் சில ஆண்டுகள் ஆகுமாம்

கரப்பான் பூச்சிக்கிட்டயேக்கூட நாம் கத்துக்க வேண்டிய விஷயம் இருக்கு! ○




முனைவர் ஆசுரா





காலம் பதில் சொல்லும் என்பது வாஸ்தவம்தான். அதுக்காக காலண்டரைப் பார்த்து கேள்வி கேட்க முடியுமா? - ரா. ஷாலினி, எரகுடி





அரிசிபுட்டு, குழாய் புட்டு, கோதுமைபுட்டு சாப்பிடலாம். அதுபோல் இன்புட்(input)டையும் அவுட்புட்(output)டையும் சாப்பிட முடியுமா?''


- ஆர். ப்ரியதர்ஷிணி, மண்ணச்சநல்லூர்

''நம்ம 'கோட்'டை நாம போட்டுக்கலாம்'' 'ரெயின் கோட்'டை ரெயின் போட்டுக்குமா?''

- த. மணிமோகன், வெள்ளைக்கோயில்



கொசுவைத் தூங்க வை!



''தூங்கும்போது கொசு கடிக்காம இருக்கணும்னா, எல்லா கொசுவும் தூங்கின பிறகு தூங்கணும்.''

- ப்ரியதர்ஷிணி, மண்ணச்சநல்லூர்

கோகுலம் டைஜஸ்ட்



இந்த டைஜஸ்டில்...

- செ. கார்த்திகேயன், உ.எண். 394, நாமக்கல்,
- சுப.ராஜ்குமார், உ.எண்.740, கமுதி
- அ.வேல்முருகன், உ.எண். 957, நம்பியூர்
- கா.நிவாசினி, மலேசியா
- ஜி.சாயிலெட்சுமி, கிருஷ்ணாபுரம்
- எஸ்.சுப்ரியா, உ.எண். 79, சென்னை
- கே.எஸ்.யோகேஸ்வரன், உ.எண்.146, உறையூர்
- ம.விவேக், குட்டம் இன்னும்... பலர்

உள்ளே...

உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுவது சீனப் பெருஞ்சுவர். சீனாவைச் சுற்றிலும் சுமார் 5,500 மைல் நீளத்துக்கு அமைந்திருக்கிறது இந்தச் சுவர். ஐந்து முதல் ஒன்பது மீட்டர் அகலமும், மூன்று முதல் பத்து மீட்டர் உயரமும் கொண்டது!

கி.மு.இரண்டாம் நூற்றாண்டு காலத்தில், சீனாவை ஆட்சி புரிந்த மன்னன் கின் ஷி ஹாங் (Qin Shi Haung) அந்தச் சமயத்தில் மங்கோலியர்களாலும், ஹூணர்களாலும் அவனது நாடு பெரும் சேதத்தைச் சந்தித்தது. அந்தப் போர்களால் உண்டான பொருள் சேதமும், உயிர்ச் சேதமும் அவனை யோசிக்க வைத்தன.

எனவே பாதுகாப்பை முன்னிட்டு பெரும் சுவரை எழுப்ப முடிவு செய்தான். அதுதான் சீனப் பெருஞ்சுவர். இந்தச் சுவரின் ஒவ்வொரு நூறு மீட்டர் தொலைவுக்கும் கோபுரம் போன்ற ஒரு அமைப்பு உண்டு. காவலர்கள் ஏறி நின்று கண்காணிப்பதற்காக உண்டான அமைப்பு போல இது விளங்குகிறது.

இந்த முழுச் சுவரும் ஒரே மன்னனின் காலத்தில் அமைக்கப்படவில்லை. 2415 கி.மீ நீளமுள்ள சுவர் மட்டுமே, இவன் காலத்தில் கட்டப்பட்டது. அவனுக்குப் பின்



பயத்தில் பிறந்த சுவர்!





* கின் ஷி ஹாங்

வந்த அரசர்கள் எஞ்சியுள்ள பகுதிகளைக் கட்டினர்.

சிறைத் தண்டனை பெற்ற சமூக விரோதிகள், குற்றவாளிகள், போர்க் கைதிகள், போர் வீரர்கள், பொதுமக்கள் ஆகியோரை இந்தச் சுவரெழுப்பும் பணியில் ஈடுபடுத்தினர். இரண்டு பெரும் வேலிகளை அமைத்து, அதன் நடுவே கருங்கற்களைக் கொட்டி நிரப்பப்பட்டதுதான் இந்த சீனப் பெருஞ்சுவர்.

தான் வசிப்பதற்காக நூறுக்கு மேற்பட்ட அரண்மனைகளைக் கட்டிக் கொண்ட மன்னர் கின் ஷி ஹாங் இன்று இல்லை; அவனுடைய அரண்மனைகள் எதுவுமே இல்லை. ஆனால், மிகக் கம்பீரமாக நிற்கிறது பெருஞ்சுவர்.


மனித சமூகத்தின் நன்மைக்காக, பாதுகாப்புக்காகச் செய்யப்படும் எந்தச் செயலும் காலங் கடந்து நிற்கும் என்பதற்கு, சீனப்பெருஞ் சுவர் வாழும் உதாரணம்! ○



செ.கார்த்திகேயன்,
உ.எண்:394,
திருச்செங்கோடு.



வீட்டைக் கட்டிப் பார்!




வீட்டின் மேற்கூரையை, பொருத்துவதற்காக எடுத்து செல்கிறார்கள் பணியாளர்கள். அவர்களுக்கு வழிகாட்டி உதவுங்கள்.

ஒளிந்திருப்பது என்ன?



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து
ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்.

சுப.ராஜ்குமார்.
உ.எண்:740.
க்ஷத்ரிய நாடார் ஆண்கள்
மேல்நிலைப்பள்ளி.
கமுதி.



"இரு, மரத்தில் ஏதாவது பழமிருக்கிறதா பார்க்கிறேன்'' என்றபடியே குடிசையை விட்டு வெளியே வந்தான் ராஜா. வீட்டு வாசலில் இருந்த மிகப் பெரிய மாமரத்தைக் கூர்ந்து பார்த்தான். உயரத்தில் ஒரே ஒரு பழம் தென்பட்டது.

''ஒரே ஒரு பழம்தான் இருக்கு. ஏறிப் பறித்து வருகிறேன்'' என்று சொன்னபடியே மரத்தில் ஏறுவதற்காகச் சென்றான். அப்போது 'கீச் கீச்' என்று விசித்திரமான ஒலி கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். கிளி போன்ற மூக்குடனும், உருவில் மிகப் பெரிதாகவும் தென்பட்டது ஒரு பறவை. அது அந்த மாம் பழத்தை கவ்விக்கொண்டிருந்தது.

''அந்தப் பழத்தையும் பறவை சாப்பிட்டு விட்டதா?' என்று கேட்டபடியே குடிசையை விட்டு வெளியே வந்தாள் அவன் மனைவி.

பதில் சொல்லாத அவனும், அவன் மனைவியும் அந்தப் பறவையைப் பார்த்தபடி நின்றனர்.

'பசி என்ற மனைவிக்கு சாப்பிடப் பழம்கூட இல்லையே. இப்போது என்ன செய்வது?' என்று நீண்டது ராஜாவின் சிந்தனை.

அப்போதுதான் கேட்டது அந்தக் குரல்.

''ஏன் கவலைப்படுகிறாய்? என் பசிக்கு உன்னுடைய மரத்தின் கனிகள் உணவாயின. உன்னுடைய பசி தீர நான் வழி செய்கிறேன்.''

வியப்புடன் பார்த்தார்கள் இருவரும். பேசியது அந்தப் பறவைதான்!

பச்சை, நீலம், மஞ்சள் என்று பஞ்ச வர்ணக் கிளி போலத் தோன்றினாலும், அதன் உடல் மிகப் பெரியதாகவும், சற்றே தங்க நிறத்திலும் மின்னியது.



"நான் தங்க மலைப் பறவை. நீ வீட்டுக்குள் போய் ஒரு பையை எடுத்து வா..." என்றது பறவை. ராஜாவும் குடிசைக்குள் சென்று ஒரு பையைக் கொண்டு வந்தான். அவனை தன் மீது ஏற்றிக் கொண்ட பறவை மேலெழும்பிப் பறந்தது. வெகு தூரம் கடந்தது. முடிவில் கீழிறங்கிய பகுதியில் எங்கு பார்த்தாலும் தங்கம். ராஜாவுக்கு ஆச்சர்யம்!

"ம்... பை நிறைய இந்த தங்கத்தை அள்ளிக் கொள். மீண்டும் உன்னை உன் இடத்தில் விட்டு விடுகிறேன்" என்றது பறவை!

"சரி: இந்தத் தங்கம் யாருடையது? ஏன் வேறு யாரையும் இங்கு காணவில்லை" என்றான் ராஜா.

"பிறருக்கு உதவாதவர்களின் பொருட்கள் எல்லாம் காலத்தால் பறிக்கப்பட்டு இங்கே சேமிக்கப்படும். உழைக்கத் துணிந்தவர்களுக்கு உதவவே அவை இங்கு இருக்கின்றன" என்ற பறவை தொடர்ந்து பேசியது:



"நீ உழைக்க முனைந்தால்தான், உன் பையிலுள்ள தங்கம் மேலும் வளரும். இல்லாவிட்டால் மண்கட்டியாகி விடும்."


அந்தப் பை நிறைய தங்கத்தோடு திரும்பிய ராஜா, நிலங்களை வாங்கி விவசாயத்தில் ஈடுபட்டான். விளைச்சலைப் பெருக்கினான்.

சிறிது காலத்துக்குப் பிறகு மீண்டும் அவனைப் பார்த்த பறவை கேட்டது.

"இன்னொரு பை தங்கம் வேண்டுமா?"

ராஜா சொன்னான்: "வேண்டாம், வயலெங்கும் தங்கமணிகள் விளைந்திருக்கின்றன."

மஞ்சள் நிற நெல்மணிகளைத்தான் அவன் சொல்கிறான் என்று புரிந்த பறவை, அங்கிருந்து பறந்து சென்றது. ○



ஆ. ஆண்ட்ரில்,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி






சி. சாருமதி,
ஆறாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி

ஜெ.கே.அல்போன்சா,
பதினொன்றாம் வகுப்பு,
புனித பிலோமினாள்
பெண்கள் மேல்நிலைப்
பள்ளி,
மேலப்புதூர்



சி.லோகேஷ்,
ஒன்பதாம் வகுப்பு,
சி.அ.நா.மே.பள்ளி,
திருப்பூர் - 7



உங்கள்





ஆ. பிரைட்டா
உறுப்பினர் எண். 934
எட்டாம் வகுப்பு,
இந்து உயர்நிலைப் பள்ளி,
வத்திராயிருப்பு



வி. நித்யா,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்
பள்ளி, நம்பியூர்

ர. மீனாட்சி,
ஒன்பதாம் வகுப்பு,
அண்ணா ஜெம் அறிவியல்
பூங்கா பள்ளி,
சென்னை



அ. காவியா,
எட்டாம் வகுப்பு,
குமுதா உயர்நிலைப்
பள்ளி,
நம்பியூர்





கைவண்ணம்!

● மடகாஸ்கர் தீவில் 'தக்காளி தவளை' என்றொரு தவளையினம் உண்டு. இது சிவப்பு நிறத்தில் தக்காளியைப் போன்ற வடிவில் இருப்பதால் இந்தப் பெயர் பெற்றது. இந்தத் தவளை பாம்பிடம் சிக்கினால் சிக்கல் பாம்புகளுக்குத்தான்!

பாம்பு அருகில் வந்து வாயைத் திறந்தால், இந்தத் தவளை தனது தோல் மீது வெள்ளை நிறத்தில் பசையை வரவழைத்துவிடுகிறது. பாம்பு கவ்வினால் அந்தப் பசை பாம்பின் வாயை மூடவிடாமல் சிறிது நேரம் இறுக்கி விடும். அந்த இடைவெளியில் தவளை தப்பிவிடும். அதோடு கதை முடிந்துவிடுவதில்லை. அந்தப் பசை பாம்பின் மீது பட்டால், அதன் உடம்பு எரிச்சலடையத் தொடங்குமாம்.

பறந்தபடியே சாப்பாடு!

● 'மர ஸ்வாலோ' என்றொரு பறவை 'இனம்'. இது தன் குஞ்சுகளுக்கு உணவைக் கொண்டு வந்து வாயில் ஊட்டும். ஆனால் குஞ்சு கொஞ்சம் வளர்ந்ததும் அதற்கான உணவை ஆகாயத்தில் பறந்தபடியே அதன் திறந்த வாயில் போடும்.



குட்டி ஸ்வாலோவும், தாயார் போடும் உணவைக் கவ்விக் கொள்ளும்.


கொம்பு ஆந்தை!



● ஆந்தைக்கு அதன் காதுகள்தான் கொம்புகள் போல் நீண்டு கொண்டிருக்கும். அதனால் இதற்கு கொம்பு ஆந்தை எனப் பெயர் வந்தது.

இதன் கால்கள் மிகவும் வலிமையானவை. 13 கிலோ எடையுள்ள ஒரு விலங்கைக்கூட இது தனது கால்களால் பற்றிக்கொண்டு அலகினால் கொத்திக் கிழித்து விடும். இவை மற்ற ஆந்தைகள் போல் கூடு கட்டாது. பிற பறவைகள் கட்டிய கூட்டை தான் கைப்பற்றிக் கொண்டு அதில் வசிக்கும். இவற்றுக்கு வாசனை அறியும் திறன் குறைவு.

தக்காளி



- ம. விவேக், குட்டம்





தவளை!

கடல் நத்தை

● 'எலிசா செலோ ரோடிகா' என்பது பச்சை நிற கடல் நத்தை. இதன் உடல் இலை வடிவில் இருக்கும். அட்லாண்டிக் கடற்கரையோரம் இவை அதிகமாக வாழ்கின்றன. இவை கடற்பாசிகளை உணவாக உண்ணும். அவற்றில் உள்ள 'பிளாஸ்டிட்' என்ற பொருள் செரிக்காது. பிளாஸ்டிட், ஒளிச்சேர்க்கைக்கு தேவையான சூரிய ஒளி, நீர் மற்றும் கார்பன்டை ஆக்சைடுகளை போஷாக்கு உள்ளதாக மாற்றும். அதன் மீது தொடர்ந்து சூரிய ஒளி படும்போது நத்தையின் உடலுக்கு சக்தி கிடைக்கிறது.

இவை உணவு இல்லாமல் சூரிய சக்தியால் ஒன்பது மாதங்கள் வரை உயிர் வாழும்.

- எஸ். சுப்ரியா, உஎண். 79, சென்னை

குடை பிடிக்கும்



I. 1. அக்காள் விதைத்த முத்து; அள்ள முடியாது முத்து; வாசலிலே முத்து; வார முடியாத முத்து - அது என்ன?

2. அரியக்குடி பெரியாத்தா; அவளோ மிகவும் கெட்டிக்காரி; பால் கொடுக்காமல் பிள்ளை வளர்ப்பாள்; பலே கெட்டிக்காரி - அவள் யார்?

3. தலை பெருத்துத் தடி முழமாம், அகப்பையன்று; தன் வாயால் மரம் கொத்தும், பறவையன்று; வலிய புயம் தட்டி எழும், மல்லரன்று; வந்த குலம் தனையழிக்கும் நஞ்சும் அன்று; குவலயத்தில் இதன் பெயரை வழுத்து வீரே! - அது என்ன?

4. வேலியிலே படர்ந்திருக்கும்; வெள்ளைப் பூ பூத்திருக்கும்; கனியும் சிவந்திருக்கும்; கன்னி இதழ் போலிருக்கும் - அது என்ன?

5. பிறந்த அன்றைக்கே நடந்து பிள்ளைச் சலங்கை கட்டாமல், தாய்ப்பாலும் குடிக்காமல் தானே வளரும் குழந்தை - அது எது?


- த. தாரணி, உ.எண்.785, ஆதனூர்.

II. 1. தலையிலே கீரிடமுண்டு அரசன் அல்ல; தளதளக்கும் மேனியுண்டு குமரி அல்ல; வீதிக்கு வருவதுண்டு; விலையுமுண்டு; விரும்புகிற பல பேர்கள் உலகில் உண்டு - அது என்ன?

2. அத்வான காட்டுக்குள்ளே அண்ணன் குடைபிடித்து நிற்கிறான்; ஆயுள் குறைந்தவன்; அடுத்தநாள் மறைந்திடுவான் - அவன் யார்?

3. பார்வைக்குப் பச்சை நிறம்;





பாக்கு வெற்றிலைப் போடாமல், வாய் மட்டும் பவள நிறம் - அது என்ன?

4. அண்ணன் தம்பி தோட்டத்திலே; பச்சைப் பாய் விரிச்சிருக்கு; பக்குவ

அண்ணன்?

மாய் எடுத்து வந்தால் பசிக்குதவும், சுவைக்குதவும் - அது என்ன?

5. முட்டையிடும் குஞ்சு பொரிக்காது; கூட்டில் குடியிருக்கும்; கூடு கட்டத் தெரியாது; குரலில் இனிமையுண்டு; சங்கீதம் தெரியாது - இது என்ன?

- **கி. பாலாஜி, உறுப்பினர் எண். 657 ஐந்தாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மே.நி. பள்ளி, திருவிழுந்தூர்.**

III. 1. ஊசி நுழையா காட்டில் ஒரு துரை போகிறான் - அது என்ன?

2. பளிங்கு மண்டபம் கட்டி, பாலாறு கட்டி, மகாராணி மஞ்சள் நீராடுகிறாள் - அது என்ன?

3. மலையில் இருந்து விழுவேன்; கால் இல்லாமல் ஓடுவேன், வாய் இல்லாமல் கதறுவேன் - நான் யார்?



4. நூல் நூற்கும் நெசவாளிக்குக் கட்டிகொள்ள துணி இல்லை - அது என்ன?

5. இணை பிரிய மாட்டார்கள், நண்பர்கள் அல்ல; ஒன்று சேர மாட்டார்கள்; பகைவர் அல்ல - அவர்கள் யார்?

- **மு. அபினேஷ், பட்டுக்கோட்டை**


IV 1. பாத்திரம் ஒன்று; பழரசம் இரண்டு - அது என்ன?

2. எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் இவன் வயிறு நிரம்பாது - அவன் யார்?

3. வீடில்லா நகரங்கள்; நீரில்லா சமுத்திரங்கள் - அது என்ன?

4. ஓரெழுத்து பறக்கும் - அது என்ன?

- **சி. பூச்சியம்மாள், எட்டாம் வகுப்பு, கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா, சின்னமதூர்**



விடைகள்:

I. 1. கோலம், 2. கோழி, 3. கோடாரி, 4. கோவைப்பழம், 5. கோழிக்குஞ்சு

II. 1. கத்தரிக்காய், 2. காளான், 3. கிளி, 4. கீரை, 5. குயில்

III 1. புகை, 2. முட்டை, 3. அருவி, 4. சிலந்தி, 5. ரயில் தண்டவாளங்கள்

IV 1. 1.முட்டை, 2. கடல், 3.தேசப்படம், 4. ஈ

● பாலில் உள்ள புரதம் 'கேசின்'

● இரத்தம் உறைதலில் ஈடுபடும் என்சைம் 'த்ராம்பின்'

- எம். கௌதமி, எட்டாம் வகுப்பு, கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா, சின்னமதூர்

எண்கள்

திருக்குறளில் பல இடங்களில் எண்கள் பயன்படுத்தப்படுள்ளன.

'ஒன்று' என்ற எண் 11 இடங்களிலும்

'இரண்டு' என்று 10 இடங்களிலும்

'நான்கு' என்று 11 இடங்களிலும்

'ஐந்து' என்று 14 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'ஆறு' என்று ஒரே ஒரு இடத்திலும் 'ஏழு' என்று 7 முறையும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

'கோடி' என்ற வார்த்தையை 7 இடங்களில் திருவள்ளுவர் பயன் படுத்தியுள்ளார்.

- உ. ரியாஷ், கீழக்கரை

● ஸ்காட்லாந்து மக்கள் 'கலிடோனியன்' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

● முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பலின் பெயர் 'விக்டோரியா.'

● ரங்கூனிலுள்ள பௌத்தர் பொற் கோயில் 'ஷ்வேதகோன்' என்று அழைக்கப்படுகிறது.

● கடல் மட்டத்துக்கு மேல் உள்ள உயரத்தை அளக்கப் பயன்படும் கருவியின் பெயர் 'ஹிப்கோமீட்டர்.'

-ஆர்.பி. இரமணி, மதுரை

● தொடர்ந்து நான்குமுறை அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ரூஸ்வெல்ட்

● இரப்பர் தோன்றிய இடம் தென் அமெரிக்கா.

● ஜப்பானின் தேசிய விளையாட்டு ஜூடோ

● பாறைப் பஞ்சு எனப்படும் கனிப்பொருள் ஆஸ்பெஸ்டாஸ்

காடுகளின்





மனிதன்!

● கரையான் அரிக்காத ஒரே மரம் தேக்கு.

- எஸ். விஜித் மாதவன், மதுரை

● 'விவிப்போரஸ்' விலங்கு என்றால் குட்டியிடும் விலங்கினங்கள்.

● இலங்கையில் வயல்வெளி மான் எனப்படுவது ஹாக் மான்

● பாந்தர் என்பவை கறுப்பு சிறுத்தைப்புலிகள்.

● உராங் உட்டாங் என்ற பெயரின் பொருள் காடுகளின் மனிதன்.

● உலகின் மிகப் பெரிய பாலைவனமான சகாரா, ஆப்ரிக்க கண்டத்தில் அமைந்துள்ளது.



● 'பனி சூழ்ந்த கண்டம்' என அழைக் கப்படுவது அண்டார்ட் டிகா.

● உலகில் அதிக (53) நாடுகளைக் கொண் டது ஆப்ரிக்க கண்டம்.

- மு. அருண்குமார், உ.எண்.670,
பன்னிரெண்டாம் வகுப்பு,
ஆர்.வி.அரசு.ஆ.மே.நி.பள்ளி, ஓசூர்

● வேர்க்கடலையின் தாவரவியல் பெயர் 'அராக்கிஸ் ஹைப்போஜியா' என்பதாகும்.

● 'ஹார்ட்டி கல்சர்' என்பது தோட்டக் கலை பற்றிய கல்வியின் ஆங்கிலப் பெயர்.


● 'ஹிப்னாலஜி' என்பது தூக்கத் தைப் பற்றிய படிப்பின் பெயர்.

- ந. பிருந்தா, உ.எண். 1098,
ஏழாம் வகுப்பு,
ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை





இந்தப் படத்தில் நட்சத்திரம், பேரல், கரடி, கடிகாரம், மீன்கள், குளிர்சாதனப்பெட்டி,
சூரியன் மறையும் ஓவியம், கோப்பை, நீலநிற நாற்காலி, சிலந்தி வலை
ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவற்றை தேடிப் பாருங்கள்.



"எல்லாமே

தம் சீடர்களுடன் பயணித்துக் கொண்டிருந்தார் சுவாமி ராமானந்தர். அந்த வழியில் ஒரு நாய் சேறு நிரம்பிய குழியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. வெளியேறும் முயற்சியில் அதன் உடலும் ஓரளவு சேற்றில் புதைந்து விட்டதால், எவ்வளவு முயற்சி செய்தும் அதனால் வெளி வர இயலவில்லை. அதைப் பார்த்த ராமானந்தர், ஓடிப்போய் தன் கரங்களால் அந்த நாயைத் தூக்கினார்.

உடன் வந்த சீடர்கள், சற்றே அருவருப்புடன் தயங்கி நின்றார்கள். என்றாலும், ராமானந்தர் நாயைக் காப்பாற்ற முனைந்தவுடன் வேறு வழியின்றி தாங்களும் அவருக்கு உதவச் சென்றார்கள்.

ராமானந்தரோ அவர்களின் உதவியை எதிர்பார்க்காதவராக அந்த நாயைக் குழாயடிக்கு எடுத்துச் சென்று, அதை நீராட்டி சுத்தப்படுத்தினார். பிறகு தம் குழுவினருக்காக எடுத்துச் சென்ற உணவை நாய்க்குப் போட்டார். வேக வேகமாக அந்த உணவைத் தின்ற நாய், நன்றியுடன் அவரைப் பார்த்து வாலாட்டியது. கால்கள் மீது வந்து உரசியது. பிறகு உடலை சிலுப்பிக் கொண்டு அங்கிருந்து ஓடியது.

அப்போது ஒரு சீடர் கேட்டார்: ''நாம் போகும் வேலையையும் ஒத்தி வைத்துவிட்டு இந்த நாயைச் சேற்றிலிருந்து விடுவிக்கத்தான் வேண்டுமா?''

அதற்கு, ''இதெல்லாம் சுயநலம் தான்'' என்றார் ராமானந்தர்.


அதைக் கேட்ட சீடர்கள் வியந்தார்கள். மாற்றுத் துணியைக்கூட தனதென்று நினைக்காத அந்த ஞானியின் சொற்கள் அவர்களைக் குழப்பின.

அவரையே கூர்ந்து பார்த்தார்கள். 'நான்' என்றும் 'எனது' என்றும் பேசுவாரே தவிர, 'தன்னுடையது' என்று ராமானந்தர் கருதியதில்லை. இது அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர், திடீரென்று இவ்வாறு பேசியதன் காரணம் என்னவாக இருக்கும் என்ற யோசனை எழுந்தது.

தொடர்ந்து பேசினார் ராமானந்தர்.

''இந்த நாயை நான் பார்த்தும் பாராததுபோல விட்டுவிட்டுப் போயிருந்தால், என் மனம் மிகவும் கவலைப்படும். 'அந்த நாய் எவ்வளவு துன்பப் பட்டதோ, யாரேனும் காப்பாற்றியிருப்பார்

அ.வேல்முருகன்,
உ.எண்:951,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்.






களோ இல்லையோ...' என்றெல்லாம் நினைத்து நினைத்து மனம் நொந்திருப்பேன். இப்போது அதைக் காப்பாற்றி விட்டதால் அந்த மன உளைச்சல் எனக்கு இல்லை. அதனால் என் செயல் சுயநலம்தானே?''

ராமானந்தரின் வார்த்தைகள் சீடர்கள் மனத்தில் புத்தொளி பாய்ச்சின. 'பயன் கருதாத சேவையே ஞானத்தின் அடித்தளம்' என்பது அவர்களுக்குப் புரிந்தது. அதையே 'தன் சுயநலம்' என்று ராமானந்தர் சொல்வதையும் அவர் களால் உணர முடிந்தது. தங்கள் பிழையை உணர்ந்து மனம் திருந்தினார்கள். ○

சுயநலம்தான்!”





I. கீழ்கண்ட 5 கேள்விகளுக்கும் பதில்கள் 'ல' என்ற எழுத்தில் தொடங்கும். எங்கே விடைகளைக் கூறுங்கள் பார்க்கலாம்!

1. மத்திய மருந்து ஆராய்ச்சிக் கழகம் அமைந்துள்ள இடம் ____________

2. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் முதன்முதலில் நடைபெற்ற இடம் ____________

3. குறிக்கோள் என்பதை இப்படியும் சொல்லலாம். ____________

4. தண்ணீரைக் கண்டுபிடித்துத் தொகுத்தவர் ____________

5. வண்ணத்துப் பூச்சிகளுக்கு சரணாலயம் உள்ள இடம் ____________

- எஸ். சாமிநாதன்,
நான்காம் வகுப்பு,
நவபாரத் மெட்ரிக்.மே.நிலைப்பள்ளி,
தஞ்சாவூர் - 7

II. கீழ்கண்ட 6 கேள்விகளுக்கும் பதில்கள் 'ல்' என்ற எழுத்தில் முடிவடையும். எங்கே விடைகளைக் காணுங்கள். பார்க்கலாம்!

1. அமீபா என்பது ஒரு ____________ உயிரி.

2. மீன்களின் உடலில் சுவாசிக்கப் பயன்படுவது ____________

3. உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் ____________

4. காச நோய் எந்த உறுப்பை பாதிக்கும்?

5. பூட்டுக்குப் பெயர் பெற்ற இடம் ____________

6. தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயம் உள்ள இடம் ____________

- ஆர். லியோன், கென்னடி,
நான்காம் வகுப்பு,
டான்பாஸ்கோ மெட்ரிக் மே.நி.பள்ளி,
தஞ்சாவூர் - 7

III. 1. ஒருவன் கடைக்குச் சென்று 100 பொருட்களை ரூ.1000/-

எத்தனை





கொடுத்து விலைக்கு வாங்கினான். அதில் சுவர் கடிகாரத்தின் விலை 100 ரூ. பொம்மையின் விலை 30ரூ. பேனாவின் விலை 5ரூ. எனில், அவன் வாங்கிய பொருட்கள் ஒவ்வொன்றின் எண்ணிக்கை எவ்வளவு?

2) ஒரு சிறுவன் சந்தைக்கு மாம்பழங்களை விற்கச் சென்றான். ஒரு


மாம்பழங்கள்?

சாக்கில் மாம்பழங்களைக் கட்டித் தலையில் தூக்கிச் செல்லும் வழியில் கள்வர் சிலர் அவனை மிரட்டி பழங்களை அபகரித்து விட்டனர். சந்தை அதிகாரியிடம் சென்று சிறுவன் முறையிட்டான். அதற்கு, "நீ எவ்வளவு பழங்கள் கொண்டு வந்தாய்?" என்று அவர் கேட்டார். அதற்கு சிறுவன், "ஐயா! நான் கொண்டு வந்த பழங்களை 7ஆல் வகுக்க மீதி வராது. ஆனால், 6 ஆல் வகுக்க, 5ம், 5ஆல் வகுக்க 4ம், 4ஆல் வகுக்க 3ம், 3ஆல் வகுக்க 2ம், 2 ஆல் வகுக்க 1ம், ஆனால் 1ஆல் வகுக்க சரியாய் போகும் என்றான். எனில் சிறுவன் கொண்டு வந்த மாம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு?



3. இரண்டு தந்தைகளும், இரண்டு மகன்களும் காட்டிற்குச் சென்று மூன்று மைனாக்களை வேட்டையாடினார்கள். அவர்கள் எவ்வாறு சமமாகப் பிரித்துக் கொண்டார்கள்?

IV 1. இந்தக் கடிகாரத்தை இரண்டு பாகமாகப் பிரித்தால் கூட்டுத் தொகை ஒன்றாக வரும். எப்படி?





2. கி.மு. 10ம் ஆண்டிற்கும் கி.பி 10ம் ஆண்டிற்கும் இடையில் எத்தனை ஆண்டுகள் உள்ளன?

3. ஒருவருக்கு 10 மகன்கள் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு சகோதரி இருந்தார். ஆக மொத்தம் எத்தனை குழந்தைகள் அவருக்கு?

- ம.விவேக், குட்டம்

விடைகள் 56ம் பக்கம்

அம்மம்மா!

அன்னை பெயரோ தாயம்மா
அன்பில் குறைகள் ஏதம்மா
உயிராய் மதித்தது நீயம்மா
உன்னைக் காப்பேன் நானம்மா

என்னை வளர்த்த செல்லம்மா
என்ன வேண்டும் சொல்லம்மா
உன்னைப் போல ஓர் அம்மா
வேறே யாரு கூறம்மா


உலகைக் காட்டிய நல்லம்மா
உயிரைக் கொடுப்பேன் நிச்சயமா
தன்னைத் தந்த தங்கம்மா
தாங்கி நிற்பேன் நம்பம்மா!

– செந்தில்குமார்,
சிவகாசி

பசுமை வரம்!

தாய்நிலம் தந்தவரம்
தாவரம்!
தாணி செழிக்க உதவுவதும்
தாவரம்!
மரமும் செடியும் படர் கொடியும்
தாவரம்!
மனிதன் வாழ உணவு தரும்
தாவரம்!
பச்சை ஆடை உடுத்தி நிற்கும்
தாவரம்!
பயன் உணர்ந்து வளர்த்திடுவோம்
தாவரம்!

– மு.நாகார்ஜுன்,
ஈரோடு



வெற்றி முத்து!





கண்ணான
மாணவரே
முயற்சி செய்யுங்க!
கல்விக் கடலில் மூழ்கி
- வெற்றி
முத்தை அள்ளுங்க!
அன்றாடப் பாடங்களை
அன்றே படியுங்க.
அதனாலே தேர்விலொரு
அச்சம் இல்லைங்க
அன்பான பெற்றோரின்
சொல்லைக் கேளுங்க!
இன்பமாகக் கல்வி கற்று
இனிதே வாழுங்க.

- கே.எஸ். யோகேஷ்வரன்,
உறுப்பினர் எண். 146, உறையூர்.







ரா.ஸ்ரீ.விஷ்ணு
பிரதீபலட்சுமி,
உறுப்பினர் எண். 63,
இராஜபாளையம்

டி.ஆர்.ரெங்கதேவா,
உ.எண். 577
திருநெல்வேலி







பி. அறிவுமதி,
மூன்றாம் வகுப்பு,
செயிண்ட் ஜான்
மெட்ரிக் பள்ளி,
கூடுவாஞ்சேரி

குட்டீஸ் கைவண்ணம்!

என். மாலோல சேஷாத்ரி,
இரண்டாம் வகுப்பு,
காயத்ரி மெட்ரிக் மே. நி.பள்ளி,
சின்னமனூர்




ஆர். சண்முகப்பிரியா,
நான்காம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



கதை: ஜி.சாமிலெட்சுமி.
பத்தாம் வகுப்பு.
ஸ்ரீ சாரதா மெட்ரிக் பள்ளி.
கிருஷ்ணாபுரம்.
படம்: சொக்கலிங்கம்.

வளர்ச்சி!





குளத்தில் கல்லை எறிந்தால் எழும் அலைகள் வட்ட வடிவமாக இருப்பது ஏன்?

தண்ணீரில் கல் விழும் இடத்தில் மேற்பரப்பு அதிர்வுக்கு உள்ளாகிறது. இவ்வதிர்வு மற்ற இடங்களுக்கும் பரவுவதால் அலை

ஒ - ஓ



விண்மீன்கள் விட்டு விட்டு ஒளிர்வது ஏன்?

விண்மீன்கள் விட்டு விட்டு ஒளிர்வது இல்லை. அவை தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவை பூமியில் இருந்து கோடிக்கணக்கான மைல் தூரத்தில் இருக்கின்றன. எனவே இந்தத் தொலைவைக் கடந்து விண்மீனிலிருந்து வரும் ஒளி, காற்று மண்டலத்தின் வழியாகப் பயணம் செய்கிறது. இந்தப் பயணத்தின்போது, ஒளிக்கதிரின் பாதையில் விலகல் ஏற்பட்டு, சிலபோது விலகியும், சிலபோது நேராகவும் நம் கண்களுக்குத் தெரிகிறது. எனவேதான் விண்மீன்கள் விட்டு விட்டு ஒளிர்வதுபோல நம் கண்களுக்குத் தோன்றுகிறது.

வளையங்கள் உருவாகின்றன. இந்தத் தண்ணீரின் மேற்பரப்பில் இந்த அலையின் வேகம் எல்லாத் திசைகளிலும் சம அளவில் இருக்கும். ஒரு புள்ளியிலிருந்து சம தூரத்தில் இருக்குமாறு ஒரு பரப்பின் மீது கோடு வரைந்தால் அது வட்டமாகத்தான் இருக்கும். எனவேதான்

- விசை!

தண்ணீரில் கல்லை எறிந்தால் எழும் அலைகள் வட்ட வடிவமாக இருக்கின்றன.

- ம. விவேக்,
குட்டம்





தண்ணீர் உள்ள குடத்தைத் தட்டிப் பாருங்கள். சாதாரணமாக சத்தம் கேட்கும். வெறும் குடத்தைத் தட்டிப் பாருங்கள். அதிகமாகச் சத்தம் கேட்கும். இதற்கு என்ன காரணம்?

வெறும் குடத்தைத் தட்டும்போது ஏற்படும் அதிர்வலைகள் குடத்துக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள காற்றை அதிரச் செய்கின்றன. அதனால் ஏற்படும் ஒலியின் அளவானது அந்த அதிர்வலைகளின் வீச்சுக்கேற்ப இருக்கும். மேலும் காற்றில் ஏற்படும் அதிர்வலைகளும் ஒலியை அதிகப்படுத்துகின்றன.

ஆனால், நீர் நிரம்பிய குடத்தைத் தட்டும்போது, ஏற்படும் அதிர்வலைகள் இதை விடக் குறைவு.


வெறும் குடத்தைத் தட்டும்போது ஏற்படும் அதிர்வலைகளின் வீச்சு அதிகமாக இருப்பதால்தான், ஒலியும் பெரிதாகக் கேட்கிறது.


- எஸ். தணிகைவேல்,உறுப்பினர் எண். 362
பதினொராம் வகுப்பு,
சி.எஸ்.எம். நகராட்சி மேல் நிலைப் பள்ளி,
பெரிய காஞ்சிபுரம் - 1

மூளைக்கு வேலை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





வண்ணம் தீட்டுங்கள்!





இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்

திருவுளச்

கா. நிவாசினி,
ஆறாம் வகுப்பு,
மாடர்ன் பள்ளி,
மலேசியா.

மகத நாட்டில் வாழ்ந்து வந்த வேலன், ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன். சிறுவன் என்றாலும், புத்திசாலி. திடீரென்று அந்த நாட்டை ஆண்ட மன்னன் இறந்து விட, அவனது மகன் ஆட்சிக்கு வந்தான். அரசு நிர்வாகத்தில் அனுபவம் இல்லாத அவனிடம், ஒரு கொடிய பழக்கமும் இருந்தது.

அதாவது நிரபராதிகளை ஏதேனும் குற்றம் சாட்டி, சிறையில் இடுவான். பிறகு திருவுளச் சீட்டு முறையில் தண்டனை விதிப்பான். ஒரு சீட்டில் 'விடுதலை' என்றும், மறு சீட்டில் 'தண்டனை' என்று எழுதியிருப்பதாகவும், 'எது எடுக்கப்படுகிறதோ அதன்படி தீர்ப்பு வழங்கப் படும்' என்றும் கூறுவான். ஆனால், இரண்டிலும் தண்டனை என எழுதி எந்த சீட்டு எடுத்தாலும் தண்டனையே விதிக்கப்படும்.

இந்த தகவல் அந்த நாட்டின் மக்களுக்குத் தெரிந்தாலும் வெளியில் சொல்ல பயம்.

மன்னனின் இந்தச் செயலை எப்படித் திருத்துவது என்று, அமைச்சர்கள் உள்பட எவருக்கும் தெரியவில்லை. மக்களின் அதிருப்தியும், கோபமும் வளர்ந்து கொண்டிருப்பதை அறிந்து உள்ளூர கவலையும் அடைந்தார்கள்.

இந்த நிலையில் ஒரு சமயம் வேலன் இந்த மன்னனிடம் மாட்டிக் கொண்டான். 'மன்னனை அவதூறாகப் பேசினாய்' என்று அவன் மீது குற்றம் சாட்டி, நாளை உனக்கு திருவுளச் சீட்டு முறையில் தீர்ப்பு வழங்கப் படும்' என்று சிறையில் இட்டான்.



தனக்கு அளிக்




கப்படும் தண்டனையில் இருந்து தப்புவது எப்படி என யோசித்தான் வேலன். அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது.

மறுநாள்... மன்னர் முன்னிலையில் பலரும் கூடிய அவைக்கு வேலன் வந்து நின்றான். 'தனக்கு ஒரு அகல் வேண்டும்' என்று மன்னனிடம் கேட்டான். உடனே ஒரு அகல்விளக்கு கொண்டு வரப்பட்டது. அதைத் தொடர்ந்து, குடத்தில் இருந்த திருவுளச் சீட்டுக்களில் ஒரு சீட்டை எடுத்து, அகல் விளக்கின் சுடரில் எரிய வைத்தான் வேலன்.

''என்ன காரியம் செய்துவிட்டாய்! உனக்கு எவ்வாறு தீர்ப்பு வழங்குவது'' எனக் கோபத்துடன் மன்னன் கேட்டான்.

அதற்கு வேலன் சொன்னான்:

சீட்டு!



'மன்னா! இன்னொரு சீட்டை எடுத்துப் பாருங்கள். அதற்கு எதிர்ச்சொல்தானே நான் எரித்த சீட்டில் இருக்க முடியும்?''


அவனது புத்திசாலித்தனத்தை அறிந்த மன்னன் மகிழ்ந்து "உனக்கு என்ன வேண்டும் கேள்!" என்றான்.

''நிரபராதிகளை குற்றவாளிகளாக்கித் தண்டிக்கும் முறையை விட்டு விடுங்கள்'' என்று வேண்டினான் வேலன். மன்னனும் அதை ஏற்றான். அதனால் மகத நாடு செல்வச் செழிப்பும் வளமையும் பெற்றது. ○



I. 1. லக்னோ, 2. லண்டன், 3. லட்சியம், 4. லவாய்சியர், 5. லக்ஸம்பர்க்

II. 1. செல், 2. செதில், 3. மூங்கில், 4. நுரையீரல், 5. திண்டுக்கல்,6. வேடந்தாங்கல்



III. 1.

5 சுவர்க்கடிகாரம்	= 5 x 100 =	500
1 பொம்மை	= 1 x 30 =	30
94 பேனாக்கள்	= 94 x 5 =	470
	100	1000

2. விடை 119

119 % 7 = 17 மீதி = 0

119 % 6 = 19 மீதி = 5

119 % 5 = 23 மீதி = 4

119 % 4 = 29 மீதி = 3

119 % 3 = 39 மீதி = 2


119 % 2 = 59 மீதி = 1

119 % 1 = 119 மீதி = 0



3. வேட்டைக்குச் சென்றவர்கள் 1 தாத்தா, 1 தந்தை, 1 மகன் ஆகிய மூவர் மட்டுமே. அவர்கள் ஒரு மைனா வீதம் பிரித்துக் கொண்டனர்.

IV(1)



2 20 ஆண்டுகள் என்று சொன்னால் அது தவறான விடை. 18 ஆண்டுகள் என்பதே சரியான விடை. ஏனெனில் கி.பி. 0 என்ற ஆண்டோ கி.மு. 0 ஆண்டோ இல்லை.

3. மொத்தக் குழந்தைகள் 11. 10 பையன்களுக்கும் ஒரு சகோதரிதான் 10+1=11.

ஐந்து வித்தியாசங்கள்:

1. முட்டை,
2. மரத்தில் கிளை,
3. மேகம்,
4. முயலின் சட்டை நிறம்,
5. வாத்து

சரியான்னு பாருங்க!

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1151. கா.ஸ்வாதித்யா, பதினோராம் வகுப்பு, ஸ்ரீ அமிர்தா மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்

1152. செ. அர்ச்சனா தேவி, ஏழாம் வகுப்பு, புனித இஞ்ஞாசியார் மே.நி.பள்ளி, பாளையங்கோட்டை.

1153. ந. நிவேதா, ஐந்தாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

1154. பா. பத்மநாபன், இரண்டாம் வகுப்பு, நோபிள் மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, விருதுநகர்

1155. டி.எம். சோமேஸ்வரன், ஐந்தாம் வகுப்பு, சேரன் மெட்ரிகுலேஷன் மேல்.நி.பள்ளி, கரூர்.

1156. கி.மு.ஜவப்ரகாஷ், ஆறாம் வகுப்பு, சி.நா.ம. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி.

1157. ஆர்.ஆசிக் முகமது, பத்தாம் வகுப்பு, நாகமணியம்மாள் நினைவு மெட்ரிகுலேஷன் மே.நி.பள்ளி, கம்பம்.

1158. ஏ. சுந்தரராஜன், ஏழாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம்.

1159. கா. மாரிமுத்து, ஆறாம் வகுப்பு, அரசு மே.நி.பள்ளி, தொண்டாமுத்தூர்.

1160. ர. சரவணகுமார், ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்.

1161. கே. மதுவந்தி, மூன்றாம் வகுப்பு, பாரத் மெட்ரிக் பள்ளி, உத்திரமேரூர்.

1162. வி.ஆர்.தெய்வானை, நான்காம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, சென்னை.

1163. ஜி. ஸ்ரீவர்ஷிணி, ஆறாம் வகுப்பு, எஸ்.ஆர்.ஜி.டி.எஸ். மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை

1164. பி. ரோஷிணி, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீ அருணா நர்ஸரி மற்றும் துவக்கப் பள்ளி, திருவண்ணாமலை.

1165. சா. முஹைறயதீன் ஷஜீஆ பானு, ஆறாம் வகுப்பு, ஸ்ரீ கண்ணா மெட்ரிக் மே.நி.பள்ளி, கடையநல்லூர்.

1166. ஜி. பிரவீன்குமார், ஒன்பதாம் வகுப்பு, பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.

1167. கு. சிவசங்கர், ஏழாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

1168. கி. பெனிஷியா, ஐந்தாம் வகுப்பு, சி.எஸ்.ஐ. மெட்ரிகுலேஷன் பள்ளி, கன்னியாகுமரி

1169. பெ. சண்முகம், ஒன்பதாம் வகுப்பு, சங்கர் மேல்நிலைப்பள்ளி, சங்கர் நகர்

1170. க. ஜீவரத்தனம், ஒன்பதாம் வகுப்பு, அரசினர்





மேல்நிலைப்பள்ளி, மானாம்பதி.
1171. வே.மை. பரிவாதினி, ஐந்தாம் வகுப்பு, ஃபஸ்கஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, வாடிப்பட்டி.
1172. எஸ்.எம். தமிழ் மங்கை, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ ராகவேந்திரா மேல்நிலைப் பள்ளி, அரும்பாவூர்.
1173. பி. சுபாஷிணி, ஆறாம் வகுப்பு, சிஷ்யா மெட்ரிக் மே.நி.பள்ளி, திருவண்ணாமலை.
1174. எம்.ஜி. வைஷ்ணவி, ஆறாம் வகுப்பு, ஏ.ஜெ.சி. ஆங்கிலப் பள்ளி, தஞ்சாவூர்.
1175. இர. சந்தியா, ஆறாம் வகுப்பு, பெந்தோங் தமிழ்ப்பள்ளி, பகாங், மலேசியா
1176. இர. தனீஸ்வரன், ஒன்பதாம் வகுப்பு, பெந்தோங் தமிழ்ப்பள்ளி, பகாங், மலேசியா
1177. எஸ்.முத்துபாலாஜி, ஐந்தாம் வகுப்பு, செயின்ட் ஜோஸஃப் தொடக்கப்பள்ளி, அம்பாசமுத்திரம்
1178. ஏ.ஷேக் ஆசிக், ஐந்தாம் வகுப்பு, நகராட்சி நடுநிலைப் பள்ளி, தாராபுரம்
1179. ச.மோகன், ஆறாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, பொத்தனூர்
1180. ஆர். ஸ்ரீவித்யா தாரணியன், நான்காம் வகுப்பு, நகராட்சி தொடக்கப்பள்ளி, கும்பகோணம்.
1181. எம்.ஜி.சப்ரீன் பானு, ஏழாம் வகுப்பு, புனித அந்தோணியார் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளி, சென்னை.
1182. ர. செல்வ சுவேதா, ஏழாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா மெட்ரிக் மே.நி.பள்ளி, சேலம்.
1183. ஈ. திவ்ய எபேசியா, ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் மே.நி.பள்ளி, சங்கர்நகர்.
1184. சி. இந்துமதி, ஆறாம் வகுப்பு, மவுண்ட் செயின்ட் ஜோஸஃப், திருவண்ணாமலை.
1185. பி. வர்ஷா, ஐந்தாம் வகுப்பு, காமகோடி வித்யாலயா, திருச்சி.
1186. க. பாரதிகண்ணன், ஏழாம் வகுப்பு, மகாத்மா காந்தி நூற்றாண்டு கல்விக்கூடம், திருச்சி.
1187. க. சபரிநாதன், நான்காம் வகுப்பு, மகாத்மா காந்தி நூற்றாண்டு கல்விக்கூடம், திருச்சி.
1188. சி. கௌசிக், ஒன்பதாம் வகுப்பு, விவேகம் மேல்நிலைப் பள்ளி, தாராபுரம்.
1189. ம. சரத்குமார், பத்தாம் வகுப்பு, வைரவிழா உயர்நிலைப் பள்ளி, கோபி.
1190. இ. எல்ஜின் ஜான், மூன்றாம் வகுப்பு, கிறிஸ்துராஜா மெட்ரிக் மே.நி.பள்ளி, மார்த்தாண்டம்.
1191. பி. சுபாஷ் சந்திரபோஸ், பன்னிரண்டாம் வகுப்பு, சே.சா.மு. நகராட்சி மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்.
1192. சி. உமாபதி, இரண்டாம் வகுப்பு, மவுண்ட் செயின்ட் ஜோஸஃப், திருவண்ணாமலை.
1193. ஜெ.ச.பிரபாகரன், ஐந்தாம் வகுப்பு, திருவள்ளுவர் மழலையர் மற்றும்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

தொடக்கப்பள்ளி, பல்லடம்.

1194. எஸ். கதிர்பாரதி, இரண்டாம் வகுப்பு, விக்டோரியா மெட்ரிக் பள்ளி. மானாம்பதி

1195. மு. ஆறுமுகம், ஆறாம் வகுப்பு, ஆல்ஃபா ப்ளஸ் மெட்ரிக் பள்ளி, திருச்சி

1196. எஸ். வினீத் மாதவன், ஒன்பதாம் வகுப்பு, மகாத்மா மாண்டிஸோரி பள்ளி, மதுரை.



1197. டி.எம்.ஜனால்ஸ், மூன்றாம் வகுப்பு, புனித தாமஸ் மெட்ரிக் மே.நி.பள்ளி, தூத்துக்குடி

1198.பி.ஏ.டி. முகம்மது உசைன், எல்.கே. மெட்ரிகுலேஷன் பள்ளி, காயல்பட்டினம்

1199. ஐ.சாம் ஸ்டெயின்ஸ், ஐந்தாம் வகுப்பு, இம்மானுவேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தென்காசி.

1200. ஆர்.பி. சரண்குமார், ஐந்தாம் வகுப்பு, தேனி மேலப் பேட்டை நாடார் உறவின் முறை மேல்நிலைப் பள்ளி, தேனி.



''சாப்பிடறதுக்கு என்ன சார் வேணும்?''

''சப்பாத்தி உப்புமா..''

''சாரி சார்; சப்பாத்தி உப்பாது; பூரிதான் உப்பும்!''

– த. மணிமோகன்,
வெள்ளக்கோவில்




''மனுஷனாப் பிறந்தா எதை யாவது சாதிக்கணும்.''

''நல்லவேளை... நான் குழந் தையாய்த்தான் பிறந்தேன்.''

– ஆர். ஹரிணி, உறுப்பினர்
எம். 660, ஏரகுடி

அது எப்படி



''டாக்டர் நைட்ல தூக்கமே வர மாட்டேங்குது!''

''எனக்கும் அதே பிரச்னைதான். இங்க வந்துடுங்க ளேன். ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருக்கலாம்!''

– ப. கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி–1



'வயலின்' என்ற வார்த்தையை கொண்டு ஒரு வாக்கியம் சொல்லு.''

''எல்லா பருவத்திலும் நன்றாக விளைச்சல் தருவதே எங்கள் வயலின் சிறப்பு!''

– அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்

முடியும்?



''வியாதி குணமாக மீன், கோழி சாப்பிடுவதை உடனே நிறுத்தணும்.''

''என்ன டாக்டர்! அதுங்க சாப்பிடுவதை நான் எப்படி நிறுத்த முடியும்?''

– ரியாஜ், கீழக்கரை



''என்னப்பா ஐஸ்க்ரீம் இப்படி தண்ணீர் மாதிரி உருகியிருக்கு!''

''நீங்கதானே எல்லாத்தையும் சூடு பண்ணிக் கொண்டுவான்னு சொன்னீங்க!''



''காசில்லாம சாப்பிட்டதுக்காக அந்த ஓட்டல்ல என்னை அழ வெச்சுட்டாங்க!''

''அழ வெச்சுட்டானா எப்படி?''

''வெங்காயம் நறுக்க சொல்லிட்டானே...''

– பெ. சண்முகம்,
ஒன்பதாம் வகுப்பு, சங்கர்
மேல்நிலைப் பள்ளி, சங்கர்நகர்



நீங்க எல்லோரும் சாப்பிடும் முன் கையைத்தானே கழுவுவீங்க? ஆனால், ஒரு விலங்கு சாப்பிடும் முன் அந்த இரையையே கழுவித்தான் சாப்பிடும். வட அமெரிக்காவில் காணப்படும் ராக்கூன் என்கிற விலங்குதான் அது.

ராக்கூன்

அணில் போன்ற வால் அமைப்பும், சற்றே நரி போன்ற முக அமைப்பும் கொண்ட ராக்கூன்கள், பொதுவாக இலையுதிர்க் காடுகளை வாழ்விடமாகக் கொண்டவை. மலைப் பகுதிகள், கடல் சார்ந்த சதுப்பு நிலப் பகுதி களிலும் இவை வாழப் பழகிக் கொண் டுள்ளன. மெள்ள நகரப் பகுதிகளிலும் குடியேறி, மனிதர்களுடன் 'போட்டி' போட ஆரம்பித்து உள்ளன!

இந்த ராக்கூன்கள் அனைத்துண்ணி வகையைச் சார்ந்தவை. அதிலும் ஒவ் வொரு பருவத்துக்கு ஏற்றாற்போன்ற உணவு முறையை அவை மாற்றி அமைத்துக் கொள்கின்றன! வசந்த காலம், இளவேனிற் காலத்தில் சிறு சிறு பூச்சிகளையும், புழுக்களையும் ராக்கூன் உண்ணும். கடுங்கோடை, இலையுதிர் காலம் வந்துவிட்டால் அப்படியே சைவமாக மாறிவிடும்! சில சமயங் களில் சிறிய பறவைகளைக்கூட சாப் பிடும்.

கார்த்திகா





ராஜ்யம்!

ராக்கூன்களுக்குத் தொடு உணர்வு மிக அதிகம். இவ்விலங்கினுடைய முன்னங்கால்களின் அடிப்பாகம் மிக மிக நுண்ணுணர்வு உடையது. முகமூடி அணிந்தது போன்ற இவற்றின் முகத் தோற்றமும், முன்னங்கால்களின் தன்மையும் அமெரிக்கப் பழங்குடியினரின் மரபுக் கதைகளில்கூட இடம் பிடித்துள்ளன.

இவற்றால் பச்சை நிற ஒளியை எளிதில் இனங்காண முடியும். என்றாலும் இவை நிறக் குருடாகவோ அல்லது நிறங்களைப் பிரித்தறிவதில் மிக மிகக் குறைந்த திறனுடையவையாகவோதான் கருதப்படுகின்றன.

சில இக்கட்டான தருணங்களை, இவை திறமையுடன் சமாளிக்கின்றன. அது மட்டுமன்றி, எப்படிச் சமாளித்தோம் என்பதை மூன்றாண்டுகளுக்குப் பின்னும்கூட நினைவூட்டிக் கொள்ளும் திறன் இவற்றுக்கு உண்டு! இதனை ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், இதன் சராசரி ஆயுட் காலம் 1.8 முதல் 3.1 ஆண்டு











கள்தான். காப்பகங்களில் வளரும் ராக்கூன்கள் இருபதாண்டுகள் வரை உயிர்வாழ்கின்றன.



பொதுவான வகை ராக்கூன்களின் அறிவியல் பெயர், Proccyon lotor. இது தவிர இரு வகை ராக்கூன்கள் உள்ளன: Pygmy raccoon. இவை மத்திய அமெரிக்காவை ஒட்டிய காஸுமெல் (Cozumel Island) என்ற தீவில் பெருமளவில் வசிக்கின்றன. எனவே Cozumel raccoon என்றும் அழைக்கப்படுகின்றன.

இன்னொரு வகை crab eating raccoon. இதன் அறிவியல் பெயர் Procyon Concivorus. இவற்றுக்குப் பிடித்த உணவு நண்டு, ஆமை முட்டை மற்றும் பழங்கள். மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் காணப்படும் இவை, நீர்நிலை சார்ந்த பகுதிகளிலேயே பெரும்பாலும் வசிக்கும்.

Cozumel மற்றும் crab eating ராக்கூன்கள் அருகி வரும் உயிரினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

காப்பகங்களில் பாதுகாக்கப்படுவதன் மூலமும், வீடுகளில் வளர்க்கப்படுவதன் மூலமும் சிலவகை ராக்கூன்களின் எண்ணிக்கையும் ஆயுட்காலமும் அதிகரித்து வருவதாகச் சொல்கிறார்கள்.



நீரைத் தள்ளித் தள்ளி, தம் இரையைத் தேடிய பழக்கத்தின் விளைவாக ராக்கூன்களுக்கு கழுவிச் சாப்பிடும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சொல்கிறார்கள்.

நீர் நிலைகளின் அருகிலேயே தம் வாழ்க்கையை நடத்திய ராக்கூன்கள் இன்று காப்பகங்களுக்கு வந்தபின்பும் தம்முடைய இரையை நீரில் கழுவுவது இந்த அனிச்சை செயலால்தான் என்பதும் பொருத்தம்தான்! ○



- 1791ல் கருமானின் மகனாகப் பிறந்தவர்.
- 13 வயதில் பேப்பர் போடத் தொடங்கினார்.
- பேப்பர் போட்டதோடல்லாமல் புத்தகங்களை பைண்டிங் செய்தும் வருமானத்தைப் பெருக்கினார்.
- 'சர்.ஹம்பிரிடேவி' என்ற அறிஞரின் உதவியாளராகப் பணியாற்றினார்.
- லண்டனில் உள்ள ராயல் கல்வி நிறுவனத்தில் பணியாற்றியவர்.
- அவர் எழுதிய முதல் கட்டுரை 'எரி சுண்ணாம்பு' பற்றியது.
- 1821ல் தனது 30 வயதில் 'சாரா பெர்னார்டு' என்பவரை மணந்தார்.
- 'டைனமோ' என்னும் மின்சாரம் உண்டாக்கும் கருவியைக் கண்டு பிடித்தார்.
- ஹைட்ராலிஸிஸ் விதிகளை (Laws of Hydrolysis) கண்டறிந்தார்.
- எழுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த விஞ்ஞானி.

- த.தாரணி,
உறுப்பினர் எண்.785, மூன்றாம் வகுப்பு,
தூய மார்ஷினா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி,
அம்மாபேட்டை


டைனமோவைக் கண்டுபிடித்தவர்!



பதில்: மைக்கேல் ஃபாரடே


உன்னைத் தேடி வருவேன்!

கதை : ராகுல் குழந்தைக் கடவுள்கள் - 10 படம் : பிள்ளை





திடுக்கிட்டு எழுந்த வியாபாரி மூட்டையைப் பார்க்க...
ஓ...கனவு? வளையல்கள் நன்றாகத்தான் இருக்கின்றன.
கனவில் வந்தது நீதானா தாயே? உனக்கு கனவில்கூட வளையல் அணிவிக்கும் பேறு கிடைக்கவில்லையே...
ஊருக்குத் திரும்புகிறார்.
இருட்டி விட்டது. எங்கு தங்குவது?
திடீரென்று...
அட சட்! இதென்ன திடீர் மழை? எங்கு போய் தங்குவது? அதோ ஓர் குடிசை...!
குடிசையில்...
உள்ளே வாருங்கள். நனைந்து விட்டீர்களே... துவட்டிக் கொள்ளுங்கள்.
இளஞ்சூடாக இருக்கும் இந்தப் பாலைக் குடியுங்கள்.
67
மிக மிக நன்றி தாயே!


சற்று நேரம் கழித்து...
ம்... வளையல் வியாபாரியே! எனக்கு நீ வளையல் போட்டு விடுவாயா?
என்ன தாயே! இந்த வயதில் தங்களுக்கு வளையலா?
ஏன்? நான் வளையல் அணியக்கூடாதா? நன்றாக என்னைக் கூர்ந்து பார்.
கிழவியின் முகம் மறைந்து மாரியம்மன் முகம் தெரிகிறது...
தாயே! கனவிலும் நேரிலும் உன்னைப் பார்க்கும் பேறு பெற்றேனா? எவ்வளவு அதிர்ஷ்டம்!
உன் பக்தியை ஏற்று, நாச்சியார் கோயிலிலும் நான் கோயில் கொள்கிறேன். அங்கேயே உனக்குத் தரிசனம் அளிக்கிறேன், ஆகாச மாரியம்மன் என்ற பெயரில்! உருவமாக அல்ல, தீபமாக!
என் பொருட்டு சன்னதி கொள்பவளே... உன் கருணைக்கு எல்லை ஏது?
இன்றும், கும்பகோணம் அருகில் உள்ள நாச்சியார் கோயிலில் தீப வடிவில் விளங்குகிறாள் சமயபுரம் மாரியம்மன்.

கிளி மனசு!

நெடுங்கவிதை



கூம்பிக் கதவு அறைக்குள்ளே
கத்தும் பச்சைக் கிளிநானே!
நெஞ்சில் இருக்கும் சோகத்தை
நீங்கள் அறிந்திடச் சொல்லுகிறேன்!

தென்னை மரத்தின் பொந்தினிலே
திருநாள் ஒன்றில் பிறந்தேனே!
அன்னை, தந்தை கொஞ்சிடவே
அன்பில் நாளும் வளர்ந்தேனே!

ஒருநாள் வேடன் ஒருவனுமே
தூசை யின்றி வந்தானே!
இரும்புக் கையால் அழுத்தியுமே
என்னைப் பிடித்து விட்டானே!

'விட்டிடு' என்றே அழுதேனே
விடவே இல்லை; என்னையுமே
பட்டினி போட்டும், குட்டியுமே
பணியும் படியாய்ச் செய்தானே!

அன்று முதலாய் இவனுக்கு
அடிமை யானேன்! கூண்டுக்குள்
என்னை வைத்தே 'கிளி சோதிடம்'
என்றே பொய்யைச் சொல்லுகிறான்!

உண்ணக் கொடுப்பான் குறிப்பறிந்து
உதறி சீட்டை எடுத்தாலே!
சம்மதம் இல்லை என்றாலோ...
சட்டெனத் தலையில் அடிப்பானே!
ஆறறிவில்லா கிளிக்குத்தான்
ஆருடம் கூறத் தெரிந்திடுமா
என்றே மனிதர் சிந்தித்தால்
இப்படி சிறைப்பட மாட்டேனே!



புலேந்திரன்

சிறு கப்பல் தண்ணீரில் மெல்ல ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது.

அதன் மூக்குப் பகுதியில் உட்கார்ந்திருந்தார் இளைஞர் ஆபிரஹாம். மனத்துக்குள், 'இந்தக் கப்பல் எப்போது நியூ ஆர்லியான்ஸ் நகரத்துக்குச் சென்று சேரும் என்ற எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது.

திடீரென்று, 'தட்' என்று ஒரு பெரிய சத்தம். பரபரப்பாக எழுந்து நின்றார் ஆபிரஹாம். அந்தக் கப்பலில் இருந்த எல்லோரும் பதற்றத்துடன் அங்கேயும் இங்கேயும் ஓடினார்கள். என்ன நடக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை.

"என்ன ஆச்சு?" ஒரு மாலுமியை நிறுத்தி விசாரித்தார் ஆபிரஹாம்.


"நம்ம படகு மணல்ல சிக்கிடுச்சு"

"அச்சச்சோ, இப்ப என்ன பண்றது?"

"அது தெரிஞ்சா நான் ஏன் இப்படி நின்னுகிட்டிருக்கேன்?" அந்த ஆள் ஆபிரஹாம் மீது எரிந்து விழுந்தார், "நீயும் ஓடிப் போய் ஏதாவது செய்ய முடியுமான்னு பாரு. இல்லைன்னா கப்பலுக்குள்ளே தண்ணி புகுந்துடும்."

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே, தண்ணீர் நுழைய ஆரம்பித்துவிட்டது. உடனடியாக ஏதாவது செய்யவேண்டும். இல்லாவிட்டால் எல்லோர் உயிருக்கும் ஆபத்து.

ஆபிரஹாம் கொஞ்சம் நிதானமாக யோசித்தார். கப்பல் மணலில் சிக்கிவிட்டது என்றால், அந்த மணலை நீக்கவேண்டும், முன்னோக்கிச் செல்வதற்கு வழி செய்யவேண்டும். ஆனால், அதற்குமுன்னால் உள்ளே புகுந்திருக்கும் தண்ணீரை வெளியேற்ற வேண்டும். இல்லையென்றால் உள்ளே அடுக்கிவைத்திருக்கிற சரக்குகளெல்லாம் நனைந்துபோய் வீணாகிவிடும், நாமும் ஆற்றில் விழுந்து தத்தளிக்கவேண்டியதுதான்.





உடனடியாக, எல்லாப் பொருள்களையும் பின்பக்கமாக நகர்த்தி அடுக்கினார் ஆபிரஹாம். அதன்பிறகு காலியாக இருந்த முன் பகுதியில் ஓர் ஓட்டை போட்டார்.

"ஏய் முட்டாள்! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?" மற்றவர்கள் அலறினார்கள்,

"படகில ஓட்டை போட்டா அதுவழியா தண்ணியெல்லாம் உள்ளே வந்துடாதா?"

"கண்டிப்பா வரும்" என்று சிரித்தார் ஆபிரஹாம், "ஆனா, அதுக்குள்ள நான் இந்த ஓட்டையை அடைச்சுடுவேன்."

அவர் சொன்னபடி, கப்பலில் இருந்த தண்ணீரெல்லாம் அந்த ஓட்டையின்வழியே மளமளவென்று வெளியேறியது. அதன்பிறகு, சட்டென்று அந்த ஓட்டையை இறுக அடைத்துவிட்டார் ஆபிரஹாம்.


சரி; மணலை நீக்க என்ன செய்வது?

கப்பலில் இருந்த குச்சி, கம்பி, துண்டு, துக்கடா சமாசாரங்களெல்லாம் திரட்டப்பட்டன. அவற்றைக் கொண்டு, மணலை கொஞ்சம் கொஞ்சமாகப் ஒதுக்கி வழி செய்ய ஆரம்பித்தார்கள்.

பெரும் போராட்டத்துக்குப் பிறகு மணல் சிறையிலிருந்து கப்பல் வெளியே வந்தது. எல்லோரும் 'கலக்கிட்டேப்பா' என்று ஆபிரஹாமைத் தட்டிக்கொடுத்தார்கள்.

அதன்பிறகு, அந்தச் சாமர்த்தியசாலி இளைஞர் தொடர்ந்து கடுமையாக உழைத்தார். படிப்படியாக முன்னேறினார். அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டார்.

ஒருமுறை ஆபிரஹாம் இலினாய்ஸ் நகரிலிருந்து படகில் வந்துகொண்டிருந்தார். அவர் பயணம் செய்த இந்தப் படகும் திடீரென்று மணலில் சிக்கிக்கொண்டது. சட்டென்று, ஆபிரஹாமுக்குப் பழைய ஞாபகங்



கள். அப்போது சாதாரணக் கூலித் தொழிலாளி; இன்று அவர் பெரிய அரசியல்வாதி, மக்கள் பிரதிநிதி.

இந்த முறை படகின் தலைவர் தம்முடைய ஊழியர்களையெல்லாம் திரட்டினார்.

காலிப் பெட்டிகள், பேரல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மணலை ஒதுக்கினார். சிறிது நேரத்தில், அந்த மணல் குவியல் குழைந்து படகுக்கு வழி விட்டது. ஆனால், ஆபரஹாம் மனத்தில் ஏதேதோ குழப்பங்கள்.

உலகம் முழுக்க எத்தனையோ ஆறுகளில் இப்படி எத்தனையோ படகுகள் மணலில் சிக்கிக்கொள்கின்றன, ஒவ்வொரு முறையும் இப்படிக் கஷ்டப்பட்டு அவற்றை விடுவித்துக் கொண்டிருக்க முடியுமா? அதற்குப் பதிலாக, எல்லாப் படகுகளிலும் பொருத்துகிற மாதிரி ஒரு ஸ்பெஷல் கருவியைக் கண்டுபிடித்தால் என்ன?' என்று யோசித்தார். ஒரு விசையை இயக்குவதன் மூலம் சில கருவிகள் கப்பலின் அடிப்பாகத்தில் உள்ள மணலை அப்புறப்படுத்தி வழி செய்து தரும் வகையில் ஒரு கருவியைக் கண்டுபிடித்தார் ஆபிரஹாம்.



* ஆபிரஹாம் லிங்கன்

உடனடியாகத் தம்முடைய இந்தக் கண்டுபிடிப்பை விரிவாக எழுதிப் பதிவு செய்ய ஆரம்பத்தார். தம்முடைய நண்பர் உதவியுடன் அதற்கு ஒரு சிறிய 'மாடல்' இயந்திரமும் செய்துமுடித்தார். அதோடு அமெரிக்கக் காப்புரிமைச் சங்கத்தில் பதிவு செய்து, முறைப்படி 'பேடன்ட்' பெற்றுக் கொண்டார்.

ஆனால், அந்தக் கண்டுபடிப்பு நிஜத்தில் தயாரிக்கப்படவே இல்லை!

அதற்குள் அவருக்குப் பல புதிய கடமைகள் வந்துவிட்டன, அமெரிக்க மக்கள் அவரைத் தங்களுடைய புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்!

'ஆபிரஹாம்' யார் என்று இப்போது நீங்கள் ஊகித்திருப்பீர்கள். மணலில் சிக்கிக்கொண்ட படகுகளைக் காப்பாற்றுவதற்கான ஓர் உபகரணத்தைக் கண்டுபடித்த அந்த 'விஞ்ஞானி', புகழ்பெற்ற அமெரிக்க அதிபர் ஆபிரஹாம் லிங்கன்!

அமெரிக்கச் சரித்திரத்திலேயே, ஒரு புதிய கண்டுபிடிப்பைச் செய்து அதற்காகப் 'பேடன்ட்' எனப்படும் காப்புரிமை பெற்ற ஒரே ஜனாதிபதி, ஆபரஹாம் லிங்கன்தான்! அவருடைய அந்தக் கண்டுபிடிப்பு நிஜத்தில் உருவாகாவிட்டாலும்கூட, கடைசிவரை அறிவியல் கண்டுபிடிப்புகள், இயந்திரங்களின்மீது லிங்கன் மிகுந்த நேசத்துடன் இருந்தார்.

நம்மைச் சுற்றிலும் எத்தனையோ பிரச்னைகள் தலைகாட்டுகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் என்ன தீர்வு என்று நாம் ஒவ்வொருவரும் யோசிக்கத் தொடங்கினாலே, இந்த உலகத்தில் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான புதுப்புது கருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள் உருவாகிவிடும்.

எந்நேரமும் நம்முடைய கண்களை, காதுகளை, மனத்தைத் திறந்து வைத்திருந்தால், நாமும் விஞ்ஞானிதான்! ○

விஞ்ஞானக் களஞ்சியம்: சுனிதா பூபாலன், வெளியீடு: ஸ்ரீ ஐஸ்வர்யா பப்ளிகேஷன், 40/16, பெருமாள் செட்டித் தெரு, ஆரணிப்பாளையம், ஆரணி - 632 301, விலை ரூ.45.00.

வீடுகளில் தினந்தோறும் பயன்படுத்தும் பொருள் தீக்குச்சி. இதை முதன் முதலில் தயாரித்தவர் ஜான் வாக்கர். இப்படி அறுபதுக்கும் மேற்பட்ட செய்திகளை, சுவையான கட்டுரைகளாக வெளிப்படுத்தியிருக்கிறார் ஆசிரியர். மாணவர்களுக்கு உபயோகமான நூல்.



ஒவ்வொரு சம்பவத்திலும் ஊடுருவியிருக்கின்றன. பெரியவர்களும் படித்துப் பயன் பெற வேண்டிய புத்தகம்.

பூமி: ராமதுரை வெளியீடு: ப்ராடிஜி, நிய ஹாரிசன் மீடியா பிரைவேட் லிமிடெட், எண்.33/15, எல்டாம்ஸ் சாலை,







பூமிக்கு என்ன வயது?

சிரிக்க சிந்திக்க சுவையான தகவல்கள்: (கோ.செல்வம், வெளியீடு: திருவரசு புத்தக நிலையம், 23 தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை - 600 017, விலை ரூ. 45/-)

புத்திசாலித்தனம், நேர்மை, பேசும் முறை, பழகும் தன்மை... உள்ளிட்ட நல்ல குணங்களை, நூறு சின்னச் சின்ன சம்பவங்கள் மூலம் வாசிப்பவர்களின் மனதில் பதியன் செய்து விடுகிறார் ஆசிரியர். நகைச்சுவையும், ஆழமான கருத்துகளும்

தேனாம்பேட்டை, சென்னை - 600018, விலை ரூ.20/-)

நாம் வசிப்பதென்னவோ, பூமியில் தான். பூமி உருண்டையாக இருப்பது நாம் அறிந்த செய்தி. பூமியின் வயது என்ன தெரியுமா? அது சூரியனைச் சுற்றி வரும் வேகம் என்ன தெரியுமா? இப்படி நுணுக்கமான, அறிந்துகொள்ள வேண்டிய பல செய்திகளைக் கொண்ட கட்டுரைகளின் தொகுப்பு தேடிப் படிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று.

- ஆர்.எஸ்.ஆர்



மதிப்பு!


அடித்தளம்!

லால்பகதூர் சாஸ்திரி இந்தியாவின் பிரதமராக இருந்த சமயம். ஒருநாள் அவரிடம் பேட்டி எடுக்க வந்திருந்தனர் சில நிருபர்கள். புகைப்படக்காரர்களும் உடன் வந்திருந்தனர். ஆனால், அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

அதற்குக் காரணம் என்ன என்று அதிகாரி ஒருவர் சாஸ்திரியிடம் கேட்டார்.

அதற்கு லால்பகதூர் சாஸ்திரி, ''தாஜ்மஹாலைக் கட்டுவதற்கு இரண்டு வகைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. ஒன்று கட்டடத்துக்கு அடித்தளமாகப் பயன்பட்ட பாறாங்கற்கள். மற்றொன்று வெளி அலங்காரத்துக்குப் பயன்பட்ட சலவைக் கற்கள். இவற்றில் பாறாங்கற்கள்தான் அவ்வளவு பெரிய கட்டடத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவை வெளியில் தெரிவதில்லை. அவற்றைப் போலத்தான் நாம் இருக்க வேண்டும் என எனது ஆசிரியர் கூறியிருக்கிறார். அதனால்தான் எனக்கு எந்த விளம்பரமும் வேண்டாமென மறுத்தேன்'' என்றார் அமைதியுடன்.

அதைக் கேட்ட அதிகாரி வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார்.



- அ. அனீஸ் ஃபாத்திமா,
உ.எண்: 34,
பன்னிரெண்டாம் வகுப்பு,
சிசம் மெட்ரிக் மேல்
நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்



பஞ்சாபின் அரசராக ரஞ்சிங் சிங் இருந்த சமயம். எதற்கும் அஞ்சாத வீரர் அவர். 'பஞ்சாபின் சிங்கம்' என்ற பட்டப் பெயர் அவருக்கு உண்டு. இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்.

இஸ்லாமியரான பஷீர் அசீகதின் என்பவர் அரசருடைய வெளிநாட்டுச் செயலராக இருந்தார். தேர்ந்த அறிவுடைய அவர், அரசரின் நம்பிக்கைக்கு உரியவராகவும் திகழ்ந்தார்.

ஒருசமயம் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ''பஷீர் அசீகதின் அவர்களே! எனக்கு ஓர் ஐயம். நீர் இந்து மதத்தை அதிகம் மதிக்கிறீரா அல்லது இஸ்லாம் மதத்தை அதிகம் மதிக்கிறீரா? தயங்காமல் சொல்லுங்கள்?'' என்று கேட்டார் அரசர்.


உடனே அவர், ''அரசே! பெரிய ஆற்றின் நடுவே நீச்சல் அடித்துச் செல்லும் மனிதனைப் போல நான் இருகிறேன். என் கண்கள் இரு கரைகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிக்கின்றன. அவற்றுக்கு இடையே எந்த வேறுபாடும் எனக்குத் தெரியவில்லை'' என்றார். மன்னரும் அவர் விளக்கத்தைக் கேட்டு வியந்தார்.

- ஆர். ஆசிதா, கம்பம்

சபர்மதியில் உள்ள காந்தியின் ஆசிரமம்! ஆசிரமத் தொண்டர்கள் எப்போதும் அதிகாலையிலேயே குளித்து விடுவார்கள். ஒருமுறை குளிர் காரணமாகக் குளிக்கச் செல்லவில்லை. இதை அறிந்த காந்திஜி, ''ஆண்டவன் நமக்காக நதியின் நீரைக் கொடுத்திருக்கிறார்; அப்படியிருந்தும் குளிக்கச் செல்லாமல் ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்றார்.

இதைக் கேட்ட ஆசிரமத் தொண்டர் ஒருவரின் மகன், ''பாபுஜி, கடவுள் குளிரையும் கூடவே கொடுத்திருக்கிறாரே?'' என்றான். அனைவரும் சிரித்தார்கள். காந்திஜியும் ரசித்து மகிழ்ந்தார்.

- ஆர்.பி. இரமணி,
மதுரை - 20



வானில் ஒரு

கௌதம்ராம்

நிலவில் கால் வைத்ததோடு நிற்க வில்லை; விண்வெளியில் சுற்றுலா செல் வதற்கான வாய்ப்புகளை நோக்கி நகர்கிறது அறிவியல்!

விண்வெளி விஞ்ஞானத்தில் ஆரம் பத்திலிருந்தே மூன்று நாடுகள் முன் னோடிகளாக இருந்தன. அவை ஜெர்மனி, ருஷ்யா மற்றும் அமெரிக்கா. ஜெர்மனி யைச் சேர்ந்த ஹெர்மன் ஒபர்த் (Hermann Oberth), அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் காடர்ட் (Robert Goddard), ருஷ்யாவைச் சேர்ந்த கான்ஸ்டேன்டின் சியோல் கொவிஸ்கி (Konstantin Tsiolkovski) ஆகிய மூன்று விஞ்ஞானிகளும் விண் வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார் கள். இதில் ஜெர்மனி சற்றே விலகி, ராக்கெட் தொழில் நுட்பத்தை போர்க்கள ஆயுதமாகப் பயன்படுத்தி, தொலை தூரத் தாக்குதல்களை நடத் துவது சாத்தியமா என்ற ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டியது. அதன் பய னாக உருவாக்கப்பட்ட வி2 ராக் கெட்டை, இரண்டாம் உலகப் போரின் போது, மணிக்கு மூவாயிரத்து 500 மைல் வேகத்தில் செலுத்தி, லண்டன் நகரத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள்,

1957 அக்டோபர் நான்காம் தேதி ருஷ்யா முதல்முறையாக 'ஸ்புட்னிக்' என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு செயற் கைக்கோளை விண்வெளியில் செலுத் தியது. அடுத்த மாதம், விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ருஷ்யாவைச் சேர்ந்த லைகா என்ற நாய் பத்திரமாகத் திரும்பி வந்தது. நான்கு ஆண்டுகள் கழித்து, யூரி ககாரின் என்ற ருஷ்ய விண் வெளி வீரருடன் அனுப்பி வைக்கப்பட்ட 'வோஸ்டாக் 1' என்ற விண்கலம் பூமியை ஒரு முறை முழுமையாக வலம் வந்த பிறகு, வெற்றிகர மாகத் தரை இறங்கியது. விண் வெளியில் பறந்த முதல் மனி தர் என்ற பெருமைக்குரியவர் ஆனார் யூரி ககாரின்.

1958ல் எக்ஸ்புளோரர் 1 விண்கலத்தை அனுப்பிய அமெரிக்கா, 1961ல் விண் வெளி வீரர் ஆலென் ஷெப் பர்டை அனுப்பி வைத்தது. அடுத்த ஆண்டு அமெரிக் காவின் ஜான் க்ளின், விண் கலத்தில் பூமியை வலம் வந்து சாதனை புரிந்தார்.

1960களின் ஆரம்பத் தில், அமெரிக்கா அனுப் பிய ஆள் இல்லா





✱ வாலன்டினா டெரஸ்கோவா

விண்கலங்கள் சந்திரனைச் சுற்றி வந்து புகைப்படங்கள் எடுத்து அனுப்பி வைத்தன. 1961ல் அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி, அடுத்த பத்தாண்டுகளுக்குள் ஒரு மனிதரை வெற்றிகரமாக சந்திரனுக்கு அனுப்பி வைப்பதும், சந்திரனில் காலடி வைத்த பிறகு அவரை பூமிக்கு பத்திரமாக திரும்பி வரச் செய்வதும் அமெரிக்காவின் லட்சியம்' என அறிவித்தார். அதன்படியே, அமெரிக்காவின் அப்போலோ விண்கலம் 1969 ஜூலை 20 அன்று நிலாவில் இறங்கியது.



நீல் ஆர்ம்ஸ்டிராங் நிலவில் காலடி பதித்தார். அந்தக் கணத்தில் சொன்னார்: ' மனிதனுக்கு இது ஒரு சிறு காலடி! மனித இனத்துக்கோ மாபெரும் தாவல்'. 1969 முதல் 72 வரை

சுற்றுலா!

அமெரிக்கா ஆறுமுறை அப்போலோ விண்கலங்களை அனுப்பி சந்திரனைப் பற்றி பல விதமான ஆய்வுகளை மேற்கொண்டது.

* யூரிககாரின்






ரஷ்யாவைச் சேர்ந்த வாலன்டினா டெரஸ்கோவா விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி.

70களின் தொடக்க காலத்தில், அனுப்பி வைக்கப்பட்ட விண்கலங்கள் வியாழன் கிரகம் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டன. அடுத்த சில ஆண்டுகளில் அனுப்பி வைக்கப்பட்ட வாயேஜர் விண்கலம் ஜூபிடர், சனி கிரகங்கள் குறித்தும், அவற்றைச் சுற்றி அமைந்துள்ள பாதைகள், மற்றும் அவற்றைச் சுற்றிக்கொண்டிருக்கும் சந்திரன்கள் குறித்தும் பல தகவல்களையும், புகைப்படங்களையும் அனுப்பி வைத்தன.

இதன் அடுத்த கட்டமாக, அமெரிக்கா ஒரு விண்வெளி ஆய்வு நிலையத்தையே உருவாக்கி, பூமியிலிருந்து அனுப்பி வைத்தது. அதன் பெயர் ஸ்கைலேப். அதுவரை தனித்தனியே விண்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்த அமெரிக்காவும், ருஷ்யாவும் கைகோர்த்துக் கொண்டு, அப்போலோ-சோயுஸ் விண்வெளி ஆய்வுத் திட்டத்தைத் துவக்கின.

வீனஸ் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட மரைனர் 2 (1962), மார்ஸ் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட மரைனர் 4(1965), யுரேனசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாயேஜர் 2 (1986), நெப்டியூனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாயேஜர் 2 (1989) போன்றவை சில உதாரணங்கள்.

மெர்குரி கிரகத்தைப் பொறுத்தவரை, மெரைனர் 10, மெசஞ்சர் வெண்கலங்கள் அனுப்பப்பட்ட போதிலும், அது சூரி



யனுக்கு மிக அருகில் இருப்பதாலும், அதனைச் சென்றடைய விண்கலங்களுக்கும், அதனை எடுத்துச் செல்லும் ஏவுகனைகளுக்கும் பெருமளவு சக்தி அவசியமாகிறது. எனவே, மெர்குரி கிரக ஆராய்ச்சி மற்ற கிரக ஆராய்ச்சிகளைப் போல பெரும் முன்னேற்றம் காணவில்லை.

வீனஸ் கிரகத்துக்குத்தான் இதுவரை மிக அதிக அளவில் விண்கலங்கள் செலுத்தப்பட்டள்ளன.


சனி கிரகத்தை சுமார் அறுபது சந்திரன்கள் சுற்றிக்கொண்டிருப்பது ஆராய்ச்சிகள் மூலமாக தெரிய வந்துள்ளது. அவற்றுள் மிகப் பெரிய சந்திரனுக்கு 'டைட்டன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஜூபிடர் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டவை பயோனீர் 10 மற்றும் கலீலியோ. 2003ல் சீனாதான் முதல் விண்வெளிக் கலமான ஷென்ஷூ 5 ஐ அனுப்பி வைத்தது.

1980களில் விண்வெளிக்கு செயற்கைக் கொள்களை அனுப்பி வைத்து அவற்றை டெலிவிஷன் நிகழ்ச்சிகளின் ஒலிபரப்புக்குப் பயன்படுத்திக்கொள்ளும் தொழில் நுட்பம் வளரத் தொடங்கியது. மேலும், செயற்கைக் கொள்களை ராணுவ ரீதியான தகவல்கள் அறிந்து கொள்ளவும் பயன்படுத்தத் தொடங்கினார்கள். செயற்கைக் கோள்களின் உதவியால்தான், அன்டார்டிகா பகுதியில் ஓசோன் லேயரில் ஓட்டை விழுந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இன்று தொலை தொடர்பு தொழில் நுட்பம் செல்போன் சேவை யில் பெரும் பங்கு வகிக்கிறது.

அமெரிக்கா ஒரு விண்வெளி ஆய்வு நிலையத்தையே உருவாக்கி பூமியிலிருந்து அனுப்பிவைத்தது. அதன் பெயர் ஸ்கைலேப்!

1981ல். அமெரிக்கா அனுப்பி வைத்த கொலம்பியா வெண்வெளி ஓடம் ஒரு வெற்றிகரமான முயற்சி. இதுவரை இருபதுக்கும் அதிகமான கொலம்பியா ஓடங்கள் அனுப்பப் பட்டுவிட்டன.

விண்வெளித்துறையில் இந்தியாவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. தன் முயற்சியிலேயே பல செயற்கைக் கொள்களை அனுப்பியுள்ள இந்தியா, இப்போது பிற நாட்டு செயற்கைக் கோள்களை கட்டணம் பெற்று, விண்வெளிக்குச் செலுத்தும் அளவுக்கு முன்னேறியுள்ளது. இந்தியாவின் விண்வெளி ஆய்வுத் திறனுக்கு சந்திரயான் ஒரு சான்று! ○





சுவாச நிகழ்வுகள், விக்கல் உருவாதலின் காரணம், அதனின்று விடுபடுவதற்கான வழிமுறைகள் என தெளிந்த சிகிச்சைகளை விளக்கி உதவியுள்ளார், டாக்டர் கு.கணேசன்! - **எஸ்.ஏ.கேசவன், கு. கழுகாசலபுரம், குருமலை** ● 'பண்டிகை கோலாகலம்' கட்டுரையின் மூலமாகப் பண்டிகைகளைப் பற்றியும், அவைகள் கொண்டாடுவதனால் யார் யார் பலன் அடைகிறார்கள், அதனால் நமக்கு ஏற்படும் மகிழ்ச்சி ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடிந்தது. - **பி. சர்வேஸ்வரன், உறுப்பினர் எண்: 456, மதுரை** ● திரையில் இருக்கும் பசுவைத்தான் பார்த்திருக்கிறேன். ஆனால் கடலில் நந்தும் பசுவை கோகுலம் மூலம்தான் தெரிந்துகொண்டேன். - **ச. காயத்ரி, மங்கலம்** ● நிலத்தில் பருத்தி போட்டால் (தொடர்ந்து) சத்துக்களை எல்லாம் உறிஞ்சி விடும். பிறகு நிலத்தைச் சத்தானதாக மாற்ற நிலக்கடலை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிரிட வேண்டும். இப்படி, வெறும் உணவுச் சமாச்சாரமாக மட்டும் பார்க்காமல், தொழில் துறையோடு இணைத்து நல்ல பயன் பெற முடியும் என்பதுதான் அறிவியலின் மகத்துவம்! - **ஆர். அம்பிகா, மதுரை** ● 'கேள்வி' படக்கதையில் குட்டி ஒட்டகத்தின் குறும்பான கேள்வி ரசிக்கும்படியாக இருந்தது. - **ந. பிருந்தா, உ.எண்.1098, மயிலாடுதுறை** ● அமெரிக்காவில் தாமஸ் ஆல்வா எடிசனுக்கு நன்றி கூறும் வகையில் ஒரு நிமிட மின்வெட்டு தேவைதான். இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் வெளியிடும் கோகுலத்துக்கு நன்றி. - **கி. சிந்து, உ.எண். 786, ராஜ் மெட்ரிக் மே.நி.பள்ளி, திருவழுந்தூர்**

● நான் கோகுலத்தின் புதிய வாசகன். ஜூலை மாத இதழில் ஒவ்வொரு தலைப்பிலும் இடம் பிடித்த செய்திகளைப் படித்து அசந்து போய் விட்டேன். கோகுலம் செய்திகள் அனைத்தும் 'கோலாகலம்'! - **க. இளையமன்னன், முனியங்குறிச்சி** ● 'கோகுலம்' மேலும் மேலும் மெருகேறிக் கொண்டு வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. குழந்தைகளோடு குழந்தையாய் நாங்களும் கோகுலத்தைக் கொண்டாடுகிறோம். - **வளர்மதி மனோதாஸ், கொட்டாரம்** ● 'எந்த ஒரு காரியத்துக்கும் பட்டியல் போட்டு, அதன்படிச் செய்தால் எதிலும் வெற்றி பெறலாம்' என்று சொல்லியிருப்பது படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல; கோகுலம் படிக்கும் அனைவருக்குமே பயன் தரக் கூடியது. - **ஆர். பிருந்தா, மதுரை** ●'தெர்மா மீட்டர் பறவை' என்று செல்லமாகத் தலைப்பு கொடுத்து 'பிரஷ் துருக்கி' யின் பயோடேட்டாவைப் படு பிரமாதமாகத் தந்து பல மீட்டர் உயரம் தாண்டி விட்டது கோகுலம். - **எல். ஹரிபால சுப்ரமணியம், திருக்களூர்**



விடையைச் சொல்; பரிசை வெல் - 26

1. கண்ணுக்குத் தெரியாத தூசுப் பூச்சிகளை ______________________

   என்பர்.

2. விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி ______________________

3. கரையான் அரிக்காத மரம் ______________________

4. கரப்பான் பூச்சியின் இருதயத்தில் உள்ள அறைகள் ______________

5. 'ஹைட்ராலிஸிஸ்' விதிகளை கண்டறிந்தவர் ______________________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.8.2009

அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1176


1177


1178


1179


1180


1181


1182


1183


1184


1185


1186


1187


1188


1189


1190


1191



1192


1193


1194


1195


1196


1197


1198


1199


1200

யர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka